**இந்திய அரசு**

**சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்**

# இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனச் சட்டம், 2012

**(எண் 35/2012)**

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# THE RAJIV GANDHI NATIONAL INSTITUTE OF YOUTH DEVELOPMENT ACT, 2012

**(No. 35 of 2012)**

**(As on 31st October, 2023)**

**தமிழாக்கம்:**

**இந்திய அரசுக்காக**

**தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்**

**சென்னை**

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2023

# இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனச் சட்டம், 2012

(எண் 35/2012)

# THE RAJIV GANDHI NATIONAL INSTITUTE OF YOUTH DEVELOPMENT ACT, 2012

**(No. 35 of 2012 )**

# PREFACE

This edition of the Rajiv Gandhi National Institute of Youth Development Act, 2012 (No. 35 of 2012) as on 31st October, 2023, containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of the India, Extraordinary, Part XV, Section 1, Vol. I, dated 12th May, 2023 on Pages from 1 to 52.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the authoritative texts of the Act in Tamil.

New Delhi, *(Signed)……*
12th May, 2022. *Secretary to Government of India.*

# முன்னுரை

2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறுள்ள இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனச் சட்டம், 2012 (எண் 35/2012) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது, இது 2023, மே 12 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, தொகுதி I இன் 1 முதல் 52 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ் மொழிபெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது, அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புது தில்லி, (ஒப்பம்)……
12, மே 2023. இந்திய அரசு செயலாளர்.

# THE RAJIV GANDHI NATIONAL INSTITUTE OF YOUTH DEVELOPMENT ACT, 2012

## (No.35 of 2012)

## CONTENTS

**Sections** **Pages**

## CHAPTER I

## PRELIMINARY


1. Short title and commencement. 1
2. Declaration of Rajiv Gandhi National Institute of Youth Development as an institution of national importance. 1
3. Definitions. 1


## CHAPTER II

## RAJIV GANDHI NATIONAL INSTITUTE OF YOUTH DEVELOPMENT


4. Incorporation of Institute. 3
5. Effect of establishment of Institute. 3
6. Objects of Institute. 4
7. Functions of Institute. 6
8. Institute to be open to all races, creeds, gender and classes. 9
9. Teaching at Institute. 9
10. Visitor. 9


## CHAPTER III

## AUTHORITIES OF THE INSTITUTE


11. Authorities of Institute. 10
12. Establishment of Executive Council. 11

# இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனச் சட்டம், 2012

(எண் 35/2012)

## பொருளடக்கம்


**பிரிவுகள்** **பக்கங்கள்**

### அத்தியாயம் I

### முன்னுரை

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம். 1

2. இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனத்தைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனமென விளம்புதல். 1

3. பொருள் வரையறைகள். 1

### அத்தியாயம் II

### இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம்

4. நிறுவனத்தைக் கூட்டுருமமாகப் பதிவு செய்தல். 3

5. நிறுவனத்தை நிறுவுவதன் விளைவு. 3

6. நிறுவனத்தின் நோக்கங்கள். 4

7. நிறுவனத்தின் செயற்பணிகள். 6

8. நிறுவனம் அனைத்து இனங்களுக்கும், சமயக்கோட்பாடு–களுக்கும், பாலினங்களுக்கும் மற்றும் வகுப்பினருக்கும் பொதுவானதாகும். 9

9. நிறுவனத்தில் கற்பித்தல். 9

10. மேற்பார்வையீட்டாளர். 9

### அத்தியாயம் III

### நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகள்

11. நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகள். 10

12. செயற்குழுவினை நிறுவுதல். 11

13. Terms of office of, vacancies among, and allowances payable to members of Executive Council. 12

14. Meetings of Executive Council. 13

15. Powers and functions of Executive Council. 13

16. Academic Council. 15

17. Functions of Academic Council. 17

18. Finance Committee. 17

19. Functions of Finance Committee. 18

20. Other authorities. 19

## CHAPTER IV

## OFFICERS OF THE INSTITUTE

21. Officers of Institute. 19

22. Director. 19

23. Registrar. 20

24. Other officers. 21

## CHAPTER V

## FINANCE, ACCOUNTS AND AUDIT

25. Grants by Central Government. 21

26. Fund of Institute. 21

27. Endowment or other funds. 22

28. Accounts and audit. 22

29. Pension and provident fund. 23

30. Appointment of staff of Institute. 23

13. செயற்குழு உறுப்பினர்களின் பதவிக்காலங்கள், அவர்களிடையே காலியிடங்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கத்தக்க படித்தொகைகள். 12

14. செயற்குழு கூட்டங்கள். 13

15. செயற்குழுவின் அதிகாரங்களும் செயற்பணிகளும். 13

16. கல்விக் குழு. 15

17. கல்விக் குழுவின் செயற்பணிகள். 17

18. நிதிக் குழு. 17

19. நிதிக் குழுவின் செயற்பணிகள். 18

20. பிற அதிகாரஅமைப்புகள். 19

## அத்தியாயம் IV

## நிறுவனத்தின் அலுவலர்கள்

21. நிறுவனத்தின் அலுவலர்கள். 19

22. இயக்குநர். 19

23. பதிவாளர். 20

24. பிற அலுவலர்கள். 21

## அத்தியாயம் V

## நிதி, கணக்குகள் மற்றும் தணிக்கை

25. மைய அரசால் வழங்கப்படும் மானியங்கள். 21

26. நிறுவனத்தின் நிதியம். 21

27. நிலைக்கட்டளை அல்லது பிற நிதியங்கள். 22

28. கணக்குகள் மற்றும் தணிக்கை. 22

29. ஓய்வூதியம் மற்றும் வருங்கால வைப்பு நிதியம். 23

30. நிறுவனப் பணியாளர் தொகுதிக்குப் பணியமர்த்தம். 23

31. Power to make Statutes. 24

32. Statutes how to be made. 25

33. Power to make Ordinances. 26

34. Ordinances how to be made. 27

35. Conduct of business by authorities of Institute. 28

36. Tribunal of Arbitration. 28

## CHAPTER VI

### MISCELLANEOUS

37. Acts and proceedings not to be invalidated by vacancies. 29

38. Grant of degrees, etc., by Institute. 29

39. Sponsored schemes. 30

40. Meetings of Academic Council and Finance Committee. 30

41. Power of Central Government to give directions to Institute. 30

42. Protection of action taken in good faith. 31

43. Power to make rules. 31

44. Statutes, Ordinances and notifications to be published in Official Gazette and to be laid before Parliament. 31

45. Power to remove difficulties. 33

46. Transitional provisions. 33

31. நிலையமை விதிகளைச் செய்வதற்கான அதிகாரம். 24

32. நிலையமைவிதிகள் எவ்வாறு செய்யப்படுதல் வேண்டும். 25

33. நெறியமைவிதிகள் செய்வதற்கான அதிகாரம். 26

34. நெறியமைவிதிகள் எவ்வாறு செய்யப்படுதல் வேண்டும். 27

35. நிறுவனத்தின் அதிகார அமைப்புகளால் அலுவல் நடத்தப்படுதல். 28

36. பொதுவர் தீர்ப்பாயம். 28


**அத்தியாயம் VI**

**பல்வகை**


37. காலியிடங்கள் இருப்பதனால் செயல்களும் நடவடிக்கைகளும் செல்லுந்தன்மையற்றவையாக ஆக்கப்படுதல் ஆகாது. 29

38. நிறுவனத்தால் பட்டங்கள் முதலியவை அளிக்கப்படுதல். 29

39. ஊக்க ஆதரவுச் செயல்முறைத் திட்டங்கள். 30

40. கல்விக் குழு மற்றும் நிதிக் குழு கூட்டங்கள். 30

41. நிறுவனத்திற்கு பணிப்புரைகள் வழங்குவதற்கு மைய அரசுக்குள்ள அதிகாரம். 30

42. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு. 31

43. விதிகள் செய்வதற்கான அதிகாரம். 31

44. நிலையமைவிதிகளும், நெறியமைவிதிகளும் மற்றும் அறிவிக்கைகளும் அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படுதல்; மற்றும் நாடாளுமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல். 31

45. இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம். 33

46. மாறும் இடைக்காலத்திற்கான வகையங்கள். 33

# THE RAJIV GANDHI NATIONAL INSTITUTE OF YOUTH DEVELOPMENT ACT, 2012

**No. 35 of 2012**

[30th *August*, 2012.]

An Act to declare the institution known as the Rajiv Gandhi National Institute of Youth Development, to be an institution of national importance and to provide for its incorporation and for matters connected therewith or incidental thereto.

BE it enacted by Parliament in the Sixty-third Year of the Republic of India as follows:—

## CHAPTER I

## PRELIMINARY

Short title and commencement.

1. (1) This Act may be called the Rajiv Gandhi National Institute of Youth Development Act, 2012.

(2) It shall come into force on such date[1] as the Central Government may, by notification in the Official Gazette, appoint.

Declaration of Rajiv Gandhi National Institute of Youth Development as an institution of national importance.

2. Whereas the objects of the institution known as the Rajiv Gandhi National Institute of Youth Development are such as to make the institution one of national importance, it is hereby declared that the institution known as the Rajiv Gandhi National Institute of Youth Development is an institution of national importance.

Definitions.

3. In this Act, unless the context otherwise requires,—

(a) "Academic Council" means the Academic Council of the Institute;

---

1. 19th November, 2012, *vide* notification No. S.O. 2747(E), dated 19th November, 2012, *see* Gazette of India, Extraordinary, Part II, sec. 3(*ii*).

# இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனச் சட்டம், 2012

## (எண் 35/2012)

[2012, ஆகஸ்ட் 30.]

இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம் என்று வழங்கப்பெறும் நிறுவனத்தை, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனமென விளம்புவதற்கும் மற்றும் அதனைக் கூட்டுருமமாகப் பதிவு செய்வதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்குமானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில் நாடாளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

## அத்தியாயம் I

## முன்னுரை

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனச் சட்டம், 2012 என்று வழங்கப்பெறும்.

(2) இது, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று[1] செல்லாற்றல் பெறும்.

இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனத்தைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனமென விளம்புதல்.

2. இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம் என்று வழங்கப்பெறும் நிறுவனத்தின் நோக்கங்கள் அந்த நிறுவனத்தை தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவற்றுள் ஒன்றாக ஆக்கும் வகையில் இருப்பதால், இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம் என வழங்கப்பெறும் நிறுவனம், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனம் ஆகும் என்று ஈங்கிதனால் விளம்பப்படுகிறது.

பொருள் வரையறைகள்.

3. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,–

(அ) "கல்விக் குழு" என்பது, நிறுவனத்தின் கல்விக் குழு என்று பொருள்படும்;

---

1. 2012 நவம்பர் 19, 2012 நவம்பர் 19 ஆம் தேதியிட்ட அறிவிக்கை எண்.எஸ்.ஓ. 2747(E) ஐ காண்க, இந்திய அரசிதழ், சிறப்பிதழ், பகுதி II, பிரிவு 3 (ii) ஐ பார்க்க.

(b) "appointed day" means the date appointed under sub-section (2) of section 1 for coming into force of this Act;

(c) "Chairperson" means a Chairperson to the Executive Council referred to in clause (*a*) of sub-section (*2*) of section 12;

(d) "Director" means the Director of the Institute referred to in clause (*a*) of section 21;

(e) "Executive Council" means the Executive Council of the Institute established under section 12;

(f) "existing Institute" means the Rajiv Gandhi National Institute of Youth Development, Sriperumbudur, established under 21/1860.
the provisions of the Society Registration Act, 1860 and declared as deemed to be a University under section 3 of the University Grants Commission Act, 1956 and which is in existence immediately before 3/1956.
the commencement of this Act;

(g) "Fund" means the fund of the Institute to be maintained under section 26;

(h) "Institute" means the Rajiv Gandhi National Institute of Youth Development incorporated under section 4;

(i) "notification" means the notification published in the Official Gazette;

(j) "prescribed" means prescribed by rules made under this Act;

(k) "Registrar" means the Registrar of the Institute referred to in section 23;

(ஆ) "குறித்திட்ட நாள்" என்பது, இந்தச் சட்டம் செல்லாற்றல் பெறுவதற்கு 1 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி குறித்திட்ட நாள் என்று பொருள்படும்;

(இ) "தலைமையர்" என்பது, 12 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) கூறில் சுட்டப்பட்டுள்ள செயற்குழுவின் தலைமையர் என்று பொருள்படும்;

(ஈ) "இயக்குநர்" என்பது, 21 ஆம் பிரிவின் (அ) கூறில் சுட்டப்பட்டுள்ள நிறுவனத்தின் இயக்குநர் என்று பொருள்படும்;

(உ) "செயற்குழு" என்பது, 12 ஆம் பிரிவின்படி நிறுவப்பட்ட நிறுவனத்தின் செயற்குழு என்று பொருள்படும்;

(ஊ) "நிலவுறும் நிறுவனம்" என்பது சங்கப் பதிவுச் சட்டம், 1860 இன் வகையங்களின்படி நிறுவப்பட்டு
21/1860. பல்கலைக்கழக மானியக் குழுச் சட்டம், 1956 இன் 3 ஆம் பிரிவின்படி ஒரு பல்கலைக்கழகமாகக் கொள்ளப்படுவதென
3/1956. விளம்பப்பட்டு, இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்கு உடன்முன்பு இருந்து வருவதான ஸ்ரீபெரும்புதூர், இராஜீவ் காந்தி தேசிய இளைஞர மேம்பாட்டு நிறுவனம், என்று பொருள்படும்;

(எ) "நிதியம்" என்பது 26 ஆம் பிரிவின்படி பேணிவரப்பட வேண்டிய நிறுவனத்தின் நிதியம் என்று பொருள்படும்;

(ஏ) "நிறுவனம்" என்பது 4 ஆம் பிரிவின்படி கூட்டுருமமாகப் பதிவு செய்யப்பட்ட இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம் என்று பொருள்படும்;

(ஐ) "அறிவிக்கை" என்பது அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் அறிவிக்கை என்று பொருள்படும்;

(ஒ) இந்தச், என்பது "வகுத்துரைக்கப்பட்ட" சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(ஓ) "பதிவாளர்" என்பது 23 ஆம் பிரிரி சுட்டப்பட்டுள்ள நிறுவனத்தின் பதிவாளர் என்று பொருள்படும்;

(l) "Statutes" and "Ordinances" mean the Statutes and Ordinances of the Institute made under this Act.

## CHAPTER II

## RAJIV GANDHI NATIONAL INSTITUTE OF YOUTH DEVELOPMENT

Incorporation of Institute.

4. (1) The Rajiv Gandhi National Institute of Youth Development shall be a body corporate having perpetual succession and a common seal with power, subject to the provisions of this Act, to acquire, hold and dispose of property and to contract, and shall, by that name, sue and be sued.

(2) The first Chairperson, the first Director and the first members of the Executive Council and the Academic Council, and all persons who may hereafter become such officers or members, so long as they continue to hold such office or membership, shall constitute the Institute.

(3) The headquarters of the Institute shall be in the district of Kanchipuram, in the State of Tamil Nadu.

(4) The Institute may establish and maintain centres at such other places in India as it may deem fit.

Effect of establishment of Institute.

5. On and from the appointed day and subject to other provisions of this Act,—

(*a*) any reference to the existing Institute in any contract or other instrument shall be deemed as a reference to the Institute;

(ஔ) "நிலையமைவிதிகள்" மற்றும் "நெறியமைவிதிகள்" என்பன இந்தச், சட்டத்தின்படி செய்யப்பட்ட நிறுவனத்தின் நிலையமைவிதிகள் மற்றும் நெறியமைவிதிகள் என்று பொருள்படும்;

## அத்தியாயம் II

## இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம்

நிறுவனத்தைக் கூட்டுருமமாகப் பதிவு செய்தல்.

4. (1) இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம், தொடர்ந்த நிலைப்பாடும் தனியுறு இலச்சினையொன்றையும் கொண்டு, இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, சொத்தினை ஈட்டுவதற்கும் உடைமையில் வைத்திருப்பதற்கும் அயலடைவு செய்வதற்கும் மற்றும் ஒப்பந்தம் செய்துகொள்வதற்குமான அதிகாரத்துடன் ஒரு கூட்டுருமக் குழுமமாக இருத்தல் வேண்டும்; மற்றும் அந்தப் பெயரால் வழக்கிடுதலும் வழக்கிடப்படுதலும் வேண்டும்.

(2) செயற்குழு, கல்விக்குழு ஆகியவற்றின் முதல் தலைமையரும், முதல் இயக்குநரும், முதல் உறுப்பினர்களும், இதன்பின்பு அத்தகைய பதவியாளர்களாகவோ உறுப்பினர்களாகவோ ஆகலாகும் அனைத்து நபர்களும், அத்தகைய பதவியை அல்லது உறுப்பினர் நிலையைத் தொடர்ந்து வகித்து வருகிறவரையில் அவர்கள் நிறுவனத்தைக் கட்டி அமைப்பர்.

(3) இந்த நிறுவனத்தின் தலைமையிடம் தமிழ்நாடு மாநிலத்தில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருத்தல் வேண்டும்.

(4) இந்த நிறுவனம், இந்தியாவில் அது பொருத்தமெனக் கொள்ளலாகும் அத்தகைய பிற இடங்களில் மையங்களை நிறுவிப் பேணிவரலாம்.

நிறுவனத்தை நிறுவுவதன் விளைவு.

5. குறித்திட்ட நாளன்றும் அது முதற்கொண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் பிற வகையங்களுக்கு உட்பட்டு,–

(அ) எந்தவொரு ஒப்பந்தத்திலும் அல்லது பிற முறையாவணத்திலும், நிலவுறும் நிறுவனம் குறித்த சுட்டுகை எதுவும், இந்த நிறுவனம் குறித்த ஒரு சுட்டுகையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்;

(*b*) all property, movable and immovable, of or belonging to the existing Institute shall vest in the Institute;

(*c*) all rights and liabilities of the existing Institute shall be transferred to, and be the rights and liabilities of, the Institute; and

(*d*) every person employed by the existing Institute immediately before the appointed day shall hold office or service in the Institute by the same tenure, at the same remuneration and upon the same terms and conditions and with the same rights and privileges as to pension, leave, gratuity, provident fund and other matters as he would have held the same if this Act had not been passed, and shall continue to do so unless and until his employment is terminated or until such tenure, remuneration and terms and conditions are duly altered by the Statutes:

Provided that if the alteration so made is not acceptable to such employee, his employment may be terminated by the Institute in accordance with the terms of the contract with the employee or, if no provision is made therein in this behalf, on payment to him by the Institute a compensation equivalent to three months' remuneration in the case of permanent employees and one month's remuneration in the case of other employees.

Objects of Institute.

6. The objects of the Institute shall be,—

(ஆ) நிலவுறும் நிறுவனத்தின் அல்லது அதற்குச் சொந்தமான அனைத்து அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களும் இந்த நிறுவனத்திடம் உற்றமைதல் வேண்டும்;

(இ) நிலவுறும் நிறுவனத்தின் அனைத்து உரிமைகளும் கடப்பாடுகளும், நிறுவனத்திற்கு மாற்றப்பட்டு, அதன் உரிமைகளாகவும் கடப்பாடுகளாகவும் இருந்து வருதல் வேண்டும்; மற்றும்

(ஈ) குறித்திட்ட நாளுக்கு உடன் முன்பு நிலவுறும் நிறுவனத்தால் வேலைக்கமர்த்தப்பெற்ற ஒவ்வொரு நபரும், இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாமல் இருந்திருக்குமாயின், அவர் கொண்டிருந்திருக்கக் கூடியவாறு, அதே பதவியுரிமைக் காலம், அதே பணியூதியத்திலும் மற்றும் அதே வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரிலும், மற்றும் ஓய்வூதியம், விடுப்பு, பணிக்கொடை, வருங்கால வைப்பு நிதியம் மற்றும் பிற பொருட்பாடுகள் குறித்து அதே உரிமைகளுடனும் சிறப்புரிமைகளுடனும் நிறுவனத்தில் பதவியோ பணியமோ வகித்தல் வேண்டும்; மற்றும் அவருடைய வேலையமர்த்தம் முடிவுற்றாலன்றி அல்லது முடிவுறும் வரையில் அல்லது அத்தகைய பதவியுரிமைக் காலம், பணியூதியம் மற்றும் வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள் நிலையமைவிதிகளால் உரியவாறு மாற்றப்படுகிற வரையில் அவ்வாறு தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்:

**வரம்புரையாக:** அவ்வாறு செய்யப்பட்ட மாற்றம் அத்தகைய பணியாளருக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை எனின், அவருடைய வேலையமர்த்தம், பணியாளருடனான ஒப்பந்தத்தின் வரையுரைகளின்படியோ அல்லது இதற்கென அதில் வகையம் எதுவும் செய்யப்படவில்லையாயின், நிரந்தரப் பணியாளர்களின் நேர்வில் மூன்று மாதங்களுக்கான வரையூதியத்திற்கும் பிற பணியாளர்களின் நேர்வில் ஒரு மாத பணியூதியத்திற்கும் சமமான சரியீடு ஒன்று அவருக்கு நிறுவனத்தால் வழங்குவதன் பேரில் நிறுவனத்தால் முடிவுறுத்தப்படலாம்.

6. நிறுவனத்தின் நோக்கங்கள்,– நிறுவனத்தின் நோக்கங்கள்.

(a) to evolve and achieve an integrated approach to youth development for preparing and empowering the youth for the future,

(*i*) providing action oriented research inputs for policy formulation;

(ii) implementation of policy through extension and other programmes;

(iii) promoting assessment and impact study and conducting teaching, training and other academic programmes;

(b) to set up advanced National Youth Resource Centre commensurate with the international standards to provide for comprehensive and scientifically analysed data on all youth-related issues and matters, with adequate library facility, documentation and publication;

(c) to provide for research and development and dissemination of knowledge through extension and outreach programmes;

(d) to act as a nodal agency for capacity building of stakeholders including youth bodies, organisations and agencies relating to youth;

(e) to empower youth to participate in inclusive development and nation building;

(அ) இளைஞரை–

(i) கொள்கை உருவாக்கத்திற்கான செயலாக்கம் நோக்கிய ஆராய்ச்சி உள்ளீடுகளை வழங்குவதன் மூலமாக;

(ii) விரிவாக்கப்பட்ட மற்றும் பிற செயல்திட்டங்கள் வழியான கொள்கை நிறைவேற்றத்தின் மூலமாக;

(iii) மதிப்பீட்டு மற்றும் உள்ளீட்டு ஆய்வை மேம்படுத்திக் கற்பித்தல், பயிற்சி மற்றும் பிற கல்விசார் செயல்முறை வகுப்புகளை நடத்துவதன் மூலமாக

எதிர் காலத்திற்குத் தயாராக்குவதற்கும் அதிகாரம் பெறுவதற்காகவும் இளைஞர் மேம்பாட்டிற்கு ஒரு ஒருங்கிணைத்த அணுகுமுறையைத் தோற்றுவித்தல் மற்றும் அடைதல்;

(ஆ) போதுமான நூலக வசதி, ஆவணப்படுத்துகை, வெளியீடு ஆகியவற்றுடன் இளைஞர்கள் தொடர்பான அனைத்து பிரச்சினைகள் மற்றும் பொருட்பாடுகளில், விரிவான மற்றும் அறிவியல் முறையிலான பகுப்பாய்வு செய்யப்பட்ட தரவுகளை வழங்குவதற்காகப் பன்னாட்டுத் தரநிலைகளுக்கு ஒத்த மேம்பட்ட தேசிய இளைஞர் வளஆதார மையத்தை அமைத்தல்;

(இ) விரிவாக்கப்பட்ட மற்றும் எல்லைகடந்த செயல்திட்டங்கள் மூலம் ஆராய்ச்சி, வளர்ச்சி மற்றும் அறிவை பரவச்செய்திடுதல் ஆகியவற்றிற்கு வகை செய்தல்;

(ஈ) இளைஞர் அமைப்புகள், அமைவனங்கள் மற்றும் இளைஞர் தொடர்பான முகவாண்மைகள் உள்ளிட்ட உரித்தும் கொண்டோரின் திறனை வளர்ப்பதற்கானதொரு செயல்பொறுப்பு முகவாண்மையாகச் செயல்படுதல்;

(உ) தேசத்தின் உள்ளடங்கிய வளர்ச்சியிலும், தேசத்தைக் கட்டுருவாக்குதலிலும் பங்குபெற இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல்;

(f) to evolve as an institute of advanced study in the field of youth and to develop such professional excellence as may be required for the purpose;

(g) to provide for higher education in the field of youth development through employment-oriented and inter-disciplinary courses at the post graduate level.

Functions of Institute.

7. (1) Without prejudice to the provisions contained in section 6, the Institute shall,—

(c) develop a "think tank" by way of carrying out policy research, evaluation and impact analysis on youth programmes and issues of contemporary and future relevance;

(b) function as a repository of knowledge pertaining to data on youth;

(c) develop documentation, information and publication services for youth training and extension;

(d) provide technical advice and consultancy for formulation of youth related policy and promotion of youth programme;

(e) build the professional capacity of youth organisations, both in Government and voluntary sector;

(f) design, develop and conduct appropriate training and orientation programmes;

(g) conduct seminars, workshops and conferences on issues relating to youth;

(h) set up centres for dissemination of academic and training programmes;

(ஊ) இளைஞர்சார் துறையில் மேம்பட்ட கல்வி நிறுவனமாக உருவெடுத்தல்; மற்றும் அந்த நோக்கத்திற்குத் தேவைப்படலாகும் அத்தகைய தொழில்முறைச் சீர்மையை வளர்த்தல்;

(எ) முதுகலை பட்டப்படிப்பு நிலையில் துறைகளுக்கு இடையிலான மற்றும் வேலைவாய்ப்பு நோக்கிய பயிலாறுகள் மூலம் இளைஞர் மேம்பாட்டுத் துறையில் உயர்கல்வியை வழங்குதல்.

நிறுவனத்தின் செயற்பணிகள்.

7. (1). 6 ஆம் பிரிவில் அடங்கியுள்ள வகையங்களுக்குக் குந்தகமின்றி, நிறுவனம் –

(அ) சமகாலம் மற்றும் எதிர்காலம் தொடர்பான இளைஞர் செயல்திட்டங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் கொள்கை ஆராய்ச்சி, மதிப்பீடு மற்றும் செயல்விளைவு பகுப்பாய்வு நடத்துவதன் மூலமாக "சிந்தனையாளர் குழு" ஒன்றை வளர்த்தல்;

(ஆ) இளைஞர் பற்றிய தரவுகளின் அறிவு களஞ்சியமாகச் செயல்படுதல்;

(இ) இளைஞர் பயிற்சி, விரிவாக்கம் ஆகியவற்றிற்கான ஆவணப்படுத்துதல், தகவல், வெளியீடு ஆகிய சேவைகளை வளர்த்தல்;

(ஈ) இளைஞர் தொடர்புடைய கொள்கையை வகுத்தமைப்பதற்கும் இளைஞர் செயல்திட்டத்தை ஊக்குவிப்பதற்கும், தொழில்நுட்பத் தேர்வுரையும் கலந்தாய்வும் வழங்குதல்;

(உ) அரசுத்துறை, தன்னார்வத் துறை ஆகிய இரண்டிலும் உள்ள இளைஞர் அமைவனங்களின் தொழில்முறைத் திறனைக் கட்டுருவாக்குதல்;

(ஊ) உரிய பயிற்சி மற்றும் நோக்குநிலை செயல்திட்டங்களை வடிவமைத்தல், வளர்த்தல் மற்றும் நடத்துதல்;

(எ) இளைஞர் தொடர்பான பிரச்சினைகள் குறித்த கருத்தரங்குகள், பயிலரங்குகள் மற்றும் மாநாடுகளை நடத்துதல்;

(ஏ) கல்விசார் மற்றும் பயிற்சி செயல்திட்டங்களைப் பரவச் செய்திடுவதற்கான மையங்களை அமைத்தல்;

(i) collaborate with national and international university, centres, institutes and such other agencies relating to youth training and youth development;

(j) establish programmes of study and research and to provide for instruction in such branches of study as the institute deems appropriate;

(k) award, subject to such conditions as the Institute may determine, degrees, diplomas, certificates or other academic distinctions or titles at various academic levels;

(l) confer honorary degrees or other distinction awards, fellowships, scholarships, prizes and medals;

(m) determine, demand and receive fees and other charges for its courses, programmes and other matters;

(n) conduct and coordinate projects and studies relating to youth sponsored by the Government of India and other developmental agencies;

(o) create with the prior approval of the Central Government, academic, technical, administrative, managerial and other posts in the Institute and make appointments thereto in accordance with the rules and regulations of the Institute;

(p) regulate the conduct of the affairs of the Institute;

(ஐ) இளைஞர் பயிற்சி மற்றும் இளைஞர் மேம்பாடு தொடர்பான தேசிய மற்றும் பன்னாட்டுப் பல்கலைக்கழகம், மையங்கள், நிறுவனங்கள் மற்றும் அத்தகைய பிற முகவாண்மைகளுடன் இணைந்து செயல்படுதல்;

(ஒ) ஆய்வு மற்றும் ஆராய்ச்சி செயல்திட்டங்களை நிறுவுதல் மற்றும் நிறுவனமானது உரியதெனக் கருதலாகும் அத்தகைய பாடப் பிரிவுகளில் கற்பித்தலுக்கு வகை செய்தல்;

(ஓ) நிறுவனம் முறையானதெனக் கொள்கிற அத்தகைய வரைகட்டுகளுக்கு உட்பட்டு, பல்வேறு கல்விசார் நிலைகளில், பட்டங்கள், பட்டயங்கள், சான்றிதழ்கள் அல்லது பிற கல்விசார் சிறப்புச் சீர்மைகள் அல்லது சிறப்புப் பட்டங்கள் ஆகியவற்றை வழங்குதல்;

(ஔ) மதிப்புறு பட்டங்கள் அல்லது பிற தனிச்சிறப்பு விருதுகள், புத்தாய்வு மாணவர்நிலை, உதவித்தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்களை வழங்குதல்;

(க) அதன் பயிலாறுகள், செயல்திட்டங்கள் மற்றும் பிற பொருட்பாடுகளுக்குக் கட்டணங்கள் மற்றும் பிற கட்டணத் தொகைகளையும் தீர்மானித்தல், கோருதல் மற்றும் பெறுதல்;

(ங) இந்திய அரசு மற்றும் பிற மேம்பாட்டு முகவாண்மைகளால் நிதியுதவி வழங்கப்படும் இளைஞர் தொடர்பான ஆய்வுத் திட்டங்கள் மற்றும் ஆய்வுகளை நடத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல்;

(ச) மைய அரசின் முன் ஒப்பேற்புடன், நிறுவனத்தின் கல்விசார், தொழில்நுட்ப, நிருவாக, மேலாண்மை மற்றும் பிற பதவிகளை உருவாக்குதல் மற்றும் நிறுவனத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குறுத்தும்விதிகளுக்கு இணங்க அவற்றிற்கான பணியமர்த்தங்களைச் செய்தல்;

(ஞ) நிறுவனத்தின் அலுவற்பாடுகள் நடத்தப்படுதலை ஒழுங்குறுத்துதல்;

(*q*) supervise and control the discipline of all categories of employees and students of the Institute;

(*r*) purchase, hire, lease, exchange or acquire property, movable or immovable and to construct, alter and maintain any building or buildings as may be necessary;

(*s*) set up distance learning or education centres, in collaboration with Open Universities, to provide access to the aspiring young professionals enabling them to take up a career in the field of youth development;

(*t*) establish, maintain and manage halls of residences and hostels for students;

(u) lay down conditions of service including a code of conduct for teachers and other categories of employees;

(v) supervise, control and regulate the discipline of students of the Institute and to make arrangements for promoting their health and general welfare;

(w) coordinate student exchange programmes with reputed International Youth Development Institutions;

(x) undertake, assist and promote all such activities conducive or incidental to the attainment of the objectives.

(ட) நிறுவனத்தின் அனைத்து வகையான பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் ஒழுங்குக்கட்டுப்பாட்டை மேற்பார்வையிடுதல் மற்றும் கட்டாள்கை செய்தல்;

(ண) அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை விலைக்கு வாங்குதல், வாடகைக்கு எடுத்தல், குத்தகைக்கு விடுதல், பரிமாற்றம் செய்தல் அல்லது கையகப்படுத்துதல் மற்றும் தேவைப்படலாகும் எந்தவொரு கட்டடம் அல்லது கட்டடங்களைக் கட்டுதல், மாற்றியமைத்தல் மற்றும் பேணுதல்;

(த) முனைப்புடன் விரும்பும் இளம் விழைதொழிலருக்கு இளைஞர் மேம்பாட்டுத் துறையில் ஒரு தொழிலை மேற்கொள்ள இயல்விக்கும் வகையில், அணுகுவதற்கு வகை செய்யும் பொருட்டு, திறந்தவெளிப் பல்கலைக்கழகங்களின் கூட்டிணைவுடன், தொலைதூரக் கற்றல் அல்லது கல்வி மையங்களை நிறுவுதல்;

(ந) மாணவர்களுக்கான உறைவிடக் கூடங்கள் மற்றும் விடுதிகளை நிறுவுதல், பேணி வருதல் மற்றும் நிருவகித்தல்;

(ப) ஆசிரியர்கள் மற்றும் பிற வகை பணியாளர்களுக்கான நன்னடத்தை விதிகள் உள்ளடங்கிய பணிவரைக்கட்டுகளை வகுத்தல்;

(ம) நிறுவனத்தின் மாணவர்களின் ஒழுங்குக் கட்டுப்பாட்டை மேற்பார்வையிடுதல், கட்டாள்கை செய்தல் மற்றும் ஒழுங்குறுத்துதல் மற்றும் அவர்களின் நலவாழ்வையும், பொது நலனையும் மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(ய) புகழ்பெற்ற பன்னாட்டு இளைஞர் மேம்பாட்டு நிறுவனங்களுடன் மாணவர் பரிமாற்ற செயல் திட்டங்களை ஒருங்கிணைத்தல்;

(ர) நோக்கங்களை அடைவதற்கு உகந்த அல்லது சார்வுறுவான அத்தகைய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல், உதவுதல் மற்றும் மேம்படுத்துதல்.

(2) The Institute may from time to time receive gifts, grants, donations or benefactions from the Government and to receive bequests, donations and transfers of movable or immovable properties from the testators, donors or transferors, as the case may be.

(3) The Institute may enter into agreements with international organisations, institutions and universities to broaden the scope of the youth work and to facilitate knowledge development and participatory learning.

Institute to be open to all races, creeds, gender and classes.

8. (1) The Institute shall be open to persons of either sex and of whatever race, creed, caste or class, physical ability, and no test or condition shall be imposed as to religious belief or profession in admitting students, appointing teachers or employees or in any other connection whatsoever.

(2) No bequest, donation or transfer of any property shall be accepted by the Institute which in the opinion of the Executive Council involves conditions or obligations opposed to the spirit and object of this section.

Teaching at Institute.

9. All teaching and other academic activities at the Institute shall be conducted by or in the name of the Institute in accordance with the Statutes and Ordinances made in this behalf.

Visitor.

10. (1) The President of India shall be the Visitor of the Institute:

(2) நிறுவனமானது, அரசிடமிருந்து பரிசுகள், மானியங்கள், நன்கொடைகள் அல்லது அறச்செயல் உதவிகளைப் பெறலாம் மற்றும் விருப்புறுதியாவணம் எழுதிவைப்போர், நன்கொடையாளர்கள் அல்லது உரிமை மாற்றியளிப்பவர்கள் ஆகியோரிடமிருந்து நேர்வுக்கேற்ப, ஆவணவழிக்கொடைகள், நன்கொடைகள் மற்றும் அசையும் அல்லது அசையாச் சொத்துக்களின் உரிமை மாற்றங்களைப் பெறலாம்.

(3) இளைஞர் பணியின் வரையெல்லையை விரிவுபடுத்துவதற்கும் மற்றும் அறிவு மேம்பாடு மற்றும் பங்கேற்புக் கற்றலை எளிதாக்குவதற்கும் நிறுவனமானது பன்னாட்டு அமைவனங்கள், நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளலாம்.

நிறுவனம் அனைத்து இனங்களுக்கும் சமயக் கோட்பாடு–களுக்கும், பாலினங்–களுக்கும் மற்றும் வகுப்பினருக்–கும் பொதுவான–தாகும்.

8. (1) நிறுவனம், இருபால் இனத்தவர்க்கும் மற்றும் எந்த வகையான இனம், சமயக்கோட்பாடு, சாதி அல்லது வகுப்பு, உடல்திறனைச் சார்ந்தவர்களாக இருப்பினும், அந்த நபர்களுக்கும் பொதுவானதாக இருத்தல் வேண்டும்; மற்றும் மாணவர்களைச் சேர்ப்பதிலோ, ஆசிரியர்களை அல்லது பணியாளர்களை அமர்த்துவதிலோ அல்லது தொடர்புடைய பிற எதிலுமோ, எதுவேயாயினும் அதில் சமய நம்பிக்கை அல்லது சமய ஓம்புதல் குறித்துத் தேர்வாய்வோ அல்லது வரைக்கட்டோ விதிக்கப்படுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின் உட்கருத்திற்கும், நோக்கத்திற்கும் எதிரான வரைக்கட்டுகளுக்கோ அல்லது கடமைப்பாடுகளுக்கோ உள்ளாவன என செயற்குழு கருதுகிற விருப்புறுதி வழிக்கொடை, நன்கொடை அல்லது சொத்துரிமை மாற்றம் எதுவும் நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்படுதல் ஆகாது.

நிறுவனத்தில் கற்பித்தல்.

9. நிறுவனத்தில் அனைத்துக் கற்பித்தலும், பிற கல்விசார் நடவடிக்கைகளும், இதற்கென செய்யப்பட்ட நிலையமைவிதிகளுக்கும், நெறியமைவிதிகளுக்கும் இணங்க நிறுவனத்தால் அல்லது அதன் பெயரில் நடத்தப்படுதல் வேண்டும்.

மேற்பார்வை–யீட்டாளர்.

10. (1) இந்தியக் குடியரசுத்தலைவர் நிறுவனத்தின் மேற்பார்வையீட்டாளராக இருப்பார்:

Provided that the President may, by order, nominate any person to be the Visitor and such person so nominated shall hold office for such term, not exceeding five years as may be specified in the order and the person so nominated shall exercise the powers and discharge duties of the Visitor.

(2) The Visitor may, from time to time appoint one or more persons to review the work and progress of the Institute and to hold inquiries into the affairs thereof and to report thereon in such manner as the Visitor may direct.

(3) Upon receipt of any such report, the Visitor may take such action and issue such directions as he considers necessary in respect of any of the matters dealt with in the report and the Institute shall be bound to comply with such directions within reasonable time.

## CHAPTER III

## AUTHORITIES OF THE INSTITUTE

Authorities of Institute.

11. The Institute shall consist of the following authorities, namely:—

(a) the Executive Council;

(b) the Academic Council; and

(c) such other authorities as may be declared by the Statutes to be the authorities of the Institute.

**வரம்புரையாக:** குடியரசுத்தலைவர், ஆணையின்வழி, எந்தவொரு நபரையும் மேற்பார்வையீட்டாளராக நியமனம் செய்யலாம்; மற்றும் அவ்வாறு நியமனம் செய்யப்பெற்ற அத்தகைய நபர் அந்த ஆணையில் குறித்துரைக்கப்படலாகிறவாறு ஐந்து வருடங்களுக்கு மேற்படாத அத்தகைய காலவரைக்குப் பதவி வகிப்பார்; மற்றும் அவ்வாறு நியமனம் செய்யப்பெற்ற நபர் மேற்பார்வையீட்டாளரின் அதிகாரங்களைச் செலுத்துதலும் கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

(2) மேற்பார்வையீட்டாளர் பணிக்கலாகிறவாறு அத்தகைய முறையில் நிறுவனத்தின் செயற்பாட்டையும் முன்னேற்றத்தையும் மறுஆய்வு செய்வதற்கும், அதன் அலுவற்பாடுகள் பற்றி விசாரணைகள் நடத்துவதற்கும் மற்றும் அதன் மீது அறிக்கை அளிப்பதற்கும், மேற்பார்வையீட்டாளர், அவ்வப்போது, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை அமர்த்தலாம்.

(3) அத்தகைய அறிக்கை எதனையும் பெறுவதன் பேரில், மேற்பார்வையீட்டாளர், அந்த அறிக்கையில் கையாளப்பட்டுள்ள பொருட்பாடுகளில் எதனையும் பொறுத்து அவர் தேவையெனக் கருதுகிற அத்தகைய நடவடிக்கையை எடுக்கலாம்; மற்றும் அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம் மற்றும் நிறுவனம் தகுமான காலத்திற்குள் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடப்பதற்குக் கட்டுப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் III

## நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகள்

நிறுவனத்தின் அதிகார அமைப்புகள்.

11. நிறுவனம், பின்வரும் அதிகாரஅமைப்புகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும், அவையாவன:–

(அ) செயற்குழு;

(ஆ) கல்விக் குழு; மற்றும்

(இ) நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகள் என நிலையமைவிதிகளால் விளம்பப்படலாகும் அத்தகைய பிற அதிகாரஅமைப்புகள்.

Establishment of Executive Council.

12. (1) With effect from such date as the Central Government may, by notification, appoint in this behalf, there shall be established for the purpose of this Act, a central body to be called as the Executive Council.

(2) The Executive Council shall consist of the following members, namely:—

(a) an eminent person of academic repute to be nominated by the Visitor—Chairperson;

(b) an eminent person in the field of Youth Development to be nominated by the Visitor—Vice-Chairperson;

(c) Secretary, Department of Youth Affairs, Ministry of Youth Affairs and Sports—ex officio Member;

(d) Joint Secretary, Department of Youth Affairs, Ministry of Youth Affairs and Sports — *ex officio* Member;

(e) Director, Rajiv Gandhi National Institute of Youth Development — *ex officio* Member;

(f) Professor from Rajiv Gandhi National Institute of Youth Development on rotation — Member;

(g) one eminent sports personality to be nominated by the Central Government — Member;

(h) one Head from an Academic Institution to be nominated by the Central Government — Member;

12. (1) மைய அரசு, இதற்கென அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியிலிருந்து செல்திறம் பெறுமாறு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, செயற்குழு என அறியப்படும் ஒரு மையக் குழுமம் நிறுவப்பட்டு இருந்து வருதல் வேண்டும். செயற் குழுவினை நிறுவுதல்.

(2) செயற்குழு, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும், அவர்களாவர்:–

(அ) மேற்பார்வையீட்டாளரால் நியமனம் செய்யப்பெற வேண்டிய கல்விசார்துறையில் புகழ்பெற்ற ஓர் உயர்நிலை நபர்– தலைமையர்;

(ஆ) மேற்பார்வையீட்டாளரால் நியமனம் செய்யப்பெற வேண்டிய இளைஞர் மேம்பாட்டுத் துறையில் ஓர் உயர்நிலை நபர்– துணைத் தலைமையர்;

(இ) இளைஞர் அலுவற்பாடுகள் மற்றும் விளையாட்டுகள் அமைச்சகத்தின், இளைஞர் அலுவற்பாடுகள் துறைச் செயலாளர் – பதவி வழி உறுப்பினர்;

(ஈ) இளைஞர் அலுவற்பாடுகள் மற்றும் விளையாட்டுகள் அமைச்சகத்தின், இளைஞர் அலுவற்பாடுகள் துறை இணைச் செயலாளர்– பதவி வழி உறுப்பினர்;

(உ) இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவன இயக்குநர்– பதவி வழி உறுப்பினர்;

(ஊ) இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனத்திலிருந்து பேராசிரியர், சுழற்சி முறையில் – உறுப்பினர்;

(எ) மைய அரசால் நியமனம் செய்யப்பெற வேண்டிய விளையாட்டுகளில் ஓர் உயர்நிலை ஆளுமைமிகு நபர்–உறுப்பினர்;

(ஏ) மைய அரசால் நியமனம் செய்யப்பெற வேண்டிய ஒரு கல்வி நிறுவனத்திலிருந்து தலைவர் ஒருவர் – உறுப்பினர்;

(i) one representative from the industry to be nominated by the Central Government from the Federation of Indian Chamber of Commerce and Industry or Confederation of Indian Industry by the Central Government — Member;

(j) the Registrar, Rajiv Gandhi National Institute of Youth Development—Member-Secretary.

(3) While nominating the members of the Executive Council under sub-section (2) due representation shall be given to women, different regions of the country, and weaker sections of the community and differently abled persons.

Terms of office of, vacancies among, and allowances payable to members of Executive Council.

13. (1) The term of office of every member of the Executive Council shall be for a period of three years from the date of his nomination:

Provided that the term of office of an *ex officio* member shall continue so long as he holds the office by virtue of which he is a member.

(2) The term of office of a member nominated to fill a casual vacancy shall be for the remainder of the term of the member in whose place he has been nominated.

(3) Notwithstanding anything contained in this section, an out-going member shall, unless the Central Government otherwise directs, continue in office until another person is nominated as a member in his place or until the expiry of one year, whichever is earlier.

(ஐ) இந்திய வாணிப மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பு அல்லது மைய அரசின் இந்தியத் தொழில்துறைக் கூட்டமைப்பிலிருந்து, மைய அரசால் நியமனம் செய்யப்பெற வேண்டிய, தொழில்துறையின் சார்பாற்றுநர் ஒருவர்– உறுப்பினர்;

(ஒ) இராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனப் பதிவாளர்–உறுப்பினர் செயலாளர்.

(3) செயற்குழு உறுப்பினர்களை (2) ஆம் உட்பிரிவின்படி நியமனம் செய்கையில் பெண்களுக்கும், நாட்டின் வெவ்வேறு மண்டலங்களுக்கும் சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினருக்கும் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கும் உரிய சார்பாற்றம் வழங்கப்படுதல் வேண்டும்.

செயற்குழு உறுப்பினர்களின் பதவிக்காலங்கள், அவர்களிடையே காலியிடங்கள் மற்றும் அவர்களுக்கு வழங்கத்தக்க படித்தொகைகள்.

13. (1) செயற்குழுவின் ஒவ்வொரு உறுப்பினரின் பதவிக்காலமும் அவர் நியமனம் செய்யப்பெற்ற தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு இருத்தல் வேண்டும் :

**வரம்புரையாக:** ஒரு பதவி வழி உறுப்பினரின் பதவிக் காலம், அவர் எந்தப் பதவியின் வழி ஓர் உறுப்பினராக இருக்கிறாரோ அந்தப் பதவியை அவர் வகித்து வருகிறவரையில் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்.

(2) ஓர் இடையெழும் காலியிடத்தை நிரப்புவதற்காக நியமனம் செய்யப்பெறும் ஓர் உறுப்பினரின் பதவிக்காலம், அவர் எந்த உறுப்பினரின் இடத்தில் நியமனம் செய்யப்பெற்றிருக்கிறாரோ அந்த நபருடைய எஞ்சிய பதவிக் காலத்திற்கு இருத்தல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், வெளிச் செல்லும் உறுப்பினர் ஒருவர், மைய அரசு பிறவாறாகப் பணித்தாலன்றி, அவருக்குப் பதிலாக இன்னொருவர் ஓர் உறுப்பினராக நியமிக்கப்படுகிறவரையில், அல்லது ஓராண்டு கழிவுறும் வரையில், இவற்றில் எது முந்தியதோ அதுவரைப் பதவியில் தொடர்ந்து இருத்தல் வேண்டும்.

(4) The members of the Executive Council, other than ex officio members, shall be paid such travelling and other allowances as may be provided by the Statutes.

Meetings of Executive Council.

14. (1) The Chairperson shall ordinarily preside at the meetings of the Executive Council and at the Convocation of the Institute:

Provided that, in his absence, the Vice-Chairperson of the Executive Council shall preside at the meetings of the Executive Council.

(2) It shall be the duty of the Chairperson to ensure that the decisions taken by the Executive Council are implemented.

(3) The Chairperson shall exercise such other powers and perform such other duties as are assigned to him by this Act.

(4) The Executive Council shall meet at least four times in a year and follow such procedure, in its meetings (including quorum at such meetings) as may be provided by the Statutes.

Powers and functions of Executive Council.

15. (1) Subject to the provisions of this Act, the Executive Council shall be responsible for the general superintendence, direction and control of the affairs of the Institute and shall also exercise the powers of the Institute not otherwise provided for by this Act, the Statutes and the Ordinances, and shall have the power to review the acts of the Academic Council and Finance Committee.

(2) Without prejudice to the provisions of sub-section (*1*), the Executive Council shall—

(*a*) take decisions on questions of policy relating to the administration and working of the Institute;

(4) பதவி வழி உறுப்பினர்கள் அல்லாத பிற செயற்குழு உறுப்பினர்களுக்கு நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு அத்தகைய பயண மற்றும் பிற படித்தொகைகள் வழங்கப்படுதல் வேண்டும்.

14. (1) தலைமையர், பொதுவாகச் செயற்குழுக் கூட்டங்களுக்கும் நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாக்களுக்கும் தலைமை வகிப்பார்: செயற்குழு கூட்டங்கள்.

**வரம்புரையாக:**அவர் வருகைதராதபோது, செயற்குழுவின் துணைத் தலைமையர் செயற்குழுக் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பார்.

(2) செயற்குழுவால் எடுக்கப்படும் முடிபுகள் செயற்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்வது தலைமையரின் கடமையாகும்.

(3) தலைமையர் இந்தச் சட்டத்தால் அவருக்குக் குறித்தளிக்கப்படும் அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்துதலும் மற்றும் அத்தகைய பிற கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

(4) செயற்குழு ஓர் ஆண்டில் குறைந்தது நான்கு முறையேனும் கூடுதல் வேண்டும்; மற்றும் நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு, (கூட்டங்களின் குறைவெண் உள்ளடங்கலாக), அத்தகைய நெறிமுறையை பின்பற்றுதல் வேண்டும்.

15. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, நிறுவனத்தின் அலுவற்பாடுகளின் பொதுக் கண்காணிப்பு, பணிப்புரை மற்றும் கட்டாள்கைக்கு, செயற்குழு பொறுப்புடையதாக இருத்தல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டத்தாலும், நிலையமைவிதிகளாலும், நெறியமைவிதிகளாலும் பிறவாறாக வகைசெய்யப்படாத நிறுவனத்தின் அதிகாரங்களையும் கூட செலுத்துதல் வேண்டும்; மற்றும் கல்விக் குழு மற்றும் நிதிக் குழுவின் செயல்பாடுகளை மறுஆய்வு செய்வதற்கு அதிகாரம் உடையது ஆகும். செயற்குழுவின் அதிகாரங்களும் செயற்பணிகளும்.

(2). (1) ஆம் உட்பிரிவின் வகையங்களுக்குக் குந்தகமின்றிச் செயற்குழு–

(அ) நிறுவனத்தின் நிருவாகம் மற்றும் செயல்படும் விதம் தொடர்பான கொள்கைகள் குறித்த பிரச்சினைகள் மீது முடிபுகள் எடுத்தல்;

(b) lay down policy regarding the duration of the courses, nomenclature of the degrees and other distinctions to be conferred by the Institute;

(c) institute courses of study and lay down standards of proficiency and other academic distinctions in respect of the courses offered by the Institute;

(d) lay down, with prior approval of the Central Government, the policy regarding the cadre structure, qualification, the method of recruitment and conditions of service of the teaching and research faculty as well as other employees of the Institute;

(e) guide resource mobililsation of the Institute and to lay down policies for utilisation;

(f) consider and approve proposals for taking loans for purposes of the Institute with or without the security of the property of the Institute;

(*g*) make Statutes and to alter, modify or rescind the same;

(h) consider and pass resolutions on annual report, annual accounts and the budget estimates of the Institutes for the next financial year as it thinks fit together with a statement of its development plans; and

(ஆ) நிறுவனத்தால் வழங்கப்பட வேண்டிய பயிலாறுகளின் காலஅளவு, பட்டங்கள் மற்றும் பிற சிறப்புச்சீர்மைகளுக்குப் பெயரிடும் முறை தொடர்பான கொள்கையை விதித்தல்;

(இ) பாடவகைப் பயிலாறுகளைத் தொடங்குதல் மற்றும் நிறுவனத்தால் அளிக்கப்படும் பயிலாறுகள் பொறுத்த பயிற்சித் திறத்தின் மற்றும் பிற கல்வி சிறப்புச்சீர்மைகளின் தரநிலைகளை விதித்தமைத்தல்;

(ஈ) மைய அரசின் முன் ஒப்பேற்புடன், நிறுவனத்தின் ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சிப் புலப்பணியாளர்கள், அத்துடன் பிற பணியாளர்களின் பணி நிலைப்பிரிவு அமைப்பு, தகுதிப்பாடு, ஆளெடுப்புமுறை மற்றும் பணிவரைக்கட்டுகள் பொறுத்த கொள்கையை விதித்தல்;

(உ) நிறுவனத்திற்கு வளஆதாரத்தைத் திரட்டுவதற்கு வழிகாட்டுதல் மற்றும் அதனைப் பயன்படுத்தலுக்கான கொள்கைகளை விதித்தல்;

(ஊ) நிறுவனச் சொத்தின் பேரில் பிணையத்துடனோ அல்லது பிணையம் இல்லாமலோ நிறுவனத்தின் நோக்கங்களுக்காகப் பெறுகடன்கள் பெறுவதற்கான கருத்துருக்களை ஓர்வு செய்து ஒப்பேற்பளித்தல்;

(எ) நிலையமைவிதிகளை உருவாக்குதல் மற்றும் அவற்றை மாற்றுதல், மாற்றமைவு செய்தல் அல்லது இரத்து செய்தல்;

(ஏ) வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய விவரவுரை ஒன்றுடன் சேர்த்து அது பொருத்தமெனக் கருதுகிறவாறு நிறுவனங்களின் அடுத்த நிதியாண்டுக்கான ஆண்டறிக்கை, ஆண்டுக் கணக்குகள் மற்றும் வரவு–செலவுத் திட்டங்களை ஓர்வு செய்து அவற்றின் மீது தீர்மானங்களை நிறைவேற்றுதல்; மற்றும்

(i) do all such things, not specifically covered under clauses (a) to (h), as may be necessary, incidental or conductive to the attainment of all or any of the powers under this section.

(3) The Executive Council shall have the power to appoint such committees as it considers necessary for the exercise of its powers and the performance of its duties under this Act.

(4) The Executive Council may, by a specific resolution to this effect, delegate any of its powers and duties to the Chairperson, Director, any officer or any authority of the Institute subject to reserving the right to review the action that may be taken under such delegated authority.

Academic Council.

16. (1) The Academic Council shall be the principal academic body of the Institute and shall, subject to the provisions of this Act, the Statutes and the Ordinances, co-ordinate and exercise general supervision over the academic policies of the Institute.

(*2*) The Academic Council shall consist of the following, namely:—

(a) Director-Chairman ex officio;

(b) one head of an academic institution of national importance to be nominated by the Chairperson;

(ஐ). (அ) முதல் (ஏ) வரையிலான கூறுகளில் குறிப்பிட்டுச் சொல்லப்படாத, இந்தப் பிரிவின்படியான அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதனையும் அடைவதற்குத் தேவையாகவோ, சார்வுறுவாகவோ அல்லது இயக்குவதாகவோ இருக்கலாகும் அத்தகைய அனைத்தையும் செய்தல் வேண்டும்.

(3) செயற்குழுவானது, இந்தச் சட்டத்தின்படி அதன் அதிகாரங்களைச் செலுத்துவதற்கும் அதன் கடமைகளைப் புரிவதற்கும் அது தேவையெனக் கருதுகிற அத்தகைய குழுக்களை அமர்த்துவதற்கு அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) செயற்குழுவானது, இதற்கென நிறைவேற்றப்பட்ட குறித்ததொரு தீர்மானத்தின் மூலமாக, அதன் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் எவற்றையும், நிறுவனத்தின் தலைமையர், இயக்குநர், அலுவலர் அல்லது அதிகாரஅமைப்பு எதற்கும், அத்தகைய ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரத்தின்படி எடுக்கப்படலாகும் நடவடிக்கையை மறுஆய்வு செய்வதற்கான உரிமையை ஒதுக்கிவைத்துக் கொள்வதற்கு உட்பட்ட, ஒப்படைவு செய்யலாம்.

16. (1) கல்விக் குழுவானது, நிறுவனத்தின் தன்மைக் கல்வி அமைப்பாக இருக்கும்; மற்றும் இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கும் நிலையமைவிதிகளுக்கும் நெறியமைவிதிகளுக்கும் உட்பட்டு, நிறுவனத்தின் கல்விசார் கொள்கைகளை ஒருங்கிணைத்துப் பொதுக் கண்காணிப்பைச் செலுத்தும். கல்விக்குழு.

(2) கல்விக் குழு பின்வருவோரைக் கொண்டதாக இருக்கும், அவர்களாவர்:–

(அ) இயக்குநர்–தலைமையாளர்; பதவிவழி

(ஆ) தலைமையரால் நியமனம் செய்யப்பெற வேண்டிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்விசார் நிறுவனம் ஒன்றின் தலைவர் ஒருவர்;

(c) one Director from any of the Indian Institute of Technology or the Indian Institute of Management to be nominated by the Chairperson;

(d) Member in-charge of Youth Affairs in the Planning Commission of India ex officio;

(e) one person from any international non-governmental organisation working in India in the field of youth work to be nominated by the Chairperson;

(f) two representatives from the non-governmental industrial sector to be nominated by the Chairperson;

(g) one Professor from the Institute, on rotation basis;

(h) Director of the Lal Bahadur Shastri National Academy of Administration, Mussorie, ex officio;

(i) two persons from non-governmental organisations working in the field of youth and adolescent development out of whom one person shall be from the north-eastern region, to be nominated by the Chairperson;

(j) two students of the Institute out of whom one student shall be female;

(k) three eminent academicians from among the fields of Social Science, Health Science, Agricultural Science, Skill Development, Management and Law to be nominated by the Chairperson;

(l) one woman representative from the International Development Organisation to be nominated by the Chairperson;

(இ) தலைமையரால் நியமனம் செய்யப்பெற வேண்டிய இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் அல்லது இந்திய மேலாண்மை நிறுவனம் எதிலிருந்தும் ஓர் இயக்குநர்;

(ஈ) இந்தியத் திட்டக் குழுவின் இளைஞர் அலுவற்பாடுகளின் பொறுப்பை உடைய உறுப்பினர், பதவி வழி;

(உ) தலைமையரால் நியமனம் செய்யப்பெற வேண்டிய இந்தியாவில் இளைஞர் பணிக்களத்தில் செயல்படும் அரசு சாரா பன்னாட்டு அமைப்பு எதிலிருந்தும் ஒரு நபர்;

(ஊ) தலைமையரால் நியமனம் செய்யப்பெற வேண்டிய அரசுசாரா தொழில்துறையிலிருந்து இரண்டு சார்பாற்றுநர்கள்;

(எ) நிறுவனத்திலிருந்து ஒரு பேராசிரியர், சுழற்சி முறையில்;

(ஏ) முசோரியிலிருக்கும் லால்பகதூர் சாஸ்திரி தேசிய நிருவாகத் தனிப் பயிற்சிக் கழகத்தின் இயக்குநர், பதவிவழி;

(ஐ) தலைமையரால் நியமனம் செய்யப்பெற வேண்டிய இளைஞர் மற்றும் வளர் இளம் பருவத்தினர் மேம்பாட்டுக் களத்தில் செயல்படும் அரசு சாரா அமைப்புகளிலிருந்து இரண்டு நபர்கள்; அவர்களில் ஒரு நபர் வடகிழக்கு மண்டலத்திலிருந்து இருத்தல் வேண்டும்;

(ஒ) நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள்; அவர்களில் ஒரு மாணவர் பெண்ணாக இருத்தல் வேண்டும்;

(ஓ) தலைமையரால் நியமனம் செய்யப்பெற வேண்டிய சமூக அறிவியல், நல்வாழ்வு அறிவியல், வேளாண்மை அறிவியல், தனித் திறன் மேம்பாடு, மேலாண்மை மற்றும் சட்டம் ஆகிய களங்களிலிருந்து மூன்று உயர் நிலைக் கல்வியாளர்கள்;

(ஔ) தலைமையரால் நியமனம் செய்யப்பெற வேண்டிய பன்னாட்டு மேம்பாட்டு அமைவனத்திலிருந்து ஒரு பெண் சார்பாற்றுநர்;

(m) an officer not below the rank of Joint Secretary to the Government of India dealing with the affairs of the Institute in the Union Ministry of Youth Affairs and Sports, ex officio.

(3) The term of office of members of the Academic Council and its powers shall be such as may be provided by the Statutes.

(4) While nominating the members of the Academic Council due representation shall be given to women (by including at least four women), from different regions of the country, weaker sections of the community and differently abled persons.

Functions of Academic Council.

17. Subject to the provisions of this Act, the Statutes and the Ordinances, the Academic Council shall have the control and general regulation, and be responsible for the framing of the Ordinances, maintenance of standards of instruction, education and examination in the Institute and shall exercise such other powers and perform such other duties as may be conferred or imposed upon it by the Statutes.

Finance Committee.

18. (1) There shall be a Finance Committee of the Institute which shall be the principal financial body of the Institute.

(2) The Finance Committee shall consist of the following, namely:—

(a) Director-Presiding Officer of the Finance Committee;

(b) Joint Secretary and Financial Adviser in the Union Ministry of Youth Affairs and Sports;

(க) இளைஞர் அலுவற்பாடுகள் மற்றும் விளையாட்டுகளுக்கான ஒன்றிய அமைச்சகத்தில் நிறுவன அலுவற்பாடுகளை கையாளும் இந்திய அரசின் இணைச் செயலாளர் படிநிலைக்குக் கீழமையாத ஓர் அலுவலர், பதவிவழி.

(3) கல்விக் குழு உறுப்பினர்களின் பதவிக்காலமும் அதன் அதிகாரங்களும் நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

(4) கல்விக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கையில் (குறைந்தது நான்கு பெண்களையேனும் சேர்ப்பதன் மூலம்) நாட்டின் பல்வேறு மண்டலங்களிலும் உள்ள பெண்கள், சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு உரிய சார்பாற்றம் வழங்கப்படுதல் வேண்டும்.

கல்விக் குழுவின் செயற்பணிகள்.

17. இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கும் நிலையமைவிதிகளுக்கும் நெறியமைவிதிகளுக்கும் உட்பட்டு, கல்விக் குழுவானது, நிறுவனத்தின் நெறியமைவிதிகளை உருவாக்குதல், நிறுவனத்தின் கற்பித்தல், கல்வி மற்றும் தேர்வின் தரநிலைகளைப் பேணிவருதல் ஆகியவற்றிற்குக் கட்டாள்கையும் பொது ஒழுங்குறுத்துதலையும் கொண்டிருப்பதுடன் அவற்றிற்குப் பொறுப்புடையதாகவும் இருத்தல் வேண்டும்; மற்றும் நிலையமைவிதிகளால் அதற்கு அளிக்கப்படலாகும் அல்லது விதிக்கப்படலாகும் அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்துதலும் அத்தகைய பிற கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

நிதிக் குழு.

18. (1) நிறுவனத்திற்கு நிதிக் குழு ஒன்று இருந்து வருதல் வேண்டும்; அது நிறுவனத்தின் முதன்மை நிதிக் குழுமமாக இருத்தல் வேண்டும்.

(2) நிதிக் குழுவானது, பின்வருவோரைக் கொண்டதாக இருத்தல் வேண்டும், அவர்களாவர்:–

(அ) இயக்குநர்– நிதிக் குழுவிற்குத் தலைமை வகிக்கும் அலுவலர்;

(ஆ) இளைஞர் அலுவற்பாடுகள் மற்றும் விளையாட்டுகளுக்கான ஒன்றியத்து அமைச்சகத்தில் இணைச் செயலாளர் மற்றும் நிதி ஆலோசகர்;

(c) Registrar of the Institute;

(d) one Professor of the Institute on rotation basis, as may be nominated by the Chairperson;

(e) one Member from the Executive Council to be nominated by the Chairperson;

(f) Joint Secretary in the Ministry of Youth Affairs and Sports dealing with the affairs of the Institute;

(g) the Finance Officer of the Institute—Member-Secretary.

(3) The term of office of members of the Finance Committee and its powers shall be such as may be provided by the Statutes.

(4) While nominating the members of the Academic Council due representation shall be given to women, different regions of the country, weaker sections of the community and differently abled persons.

Functions of Finance Committee.

19. The Finance Committee shall perform the following functions, namely:—

(a) to scrutinise the accounts and budget estimates of the Institute and to make recommendations to the Executive Council;

(b) to scrutinise the proposals for new expenditure on account of major works on purchases;

(c) to scrutinise re-appropriation statements and audit notes and make recommendations thereon to the Executive Council;

(இ) நிறுவனத்தின் பதிவாளர்;

(ஈ) தலைமையரால் சுழற்சி முறையில் நியமனம்செய்யப்பெற வேண்டிய, நிறுவனத்தின் ஒரு பேராசிரியர்;

(உ) தலைமையரால் செயற்குழுவிலிருந்து நியமனம் செய்யப்பெற வேண்டிய ஓர் உறுப்பினர்;

(ஊ) நிறுவனத்தின் அலுவற்பாடுகளைக் கையாளும் இளைஞர் அலுவற்பாடுகள் மற்றும் விளையாட்டுகளுக்கான அமைச்சகத்தின் இணைச் செயலாளர்;

(எ) நிறுவனத்தின் நிதி அலுவலர்–உறுப்பினர் செயலாளர்.

(3) நிதிக் குழு உறுப்பினர்களின் பதவிக்காலமும் அதன் அதிகாரங்களும் நிலையமைவிதிகளால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு அத்தகைய முறையில் இருத்தல் வேண்டும்.

(4) கல்விக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமனம் செய்கையில், பெண்களுக்கும், நாட்டின் பல்வேறு மண்டலங்களுக்கும், சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினருக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் உரிய சார்பாற்றம் வழங்கப்படுதல் வேண்டும்.

நிதிக் குழுவின் செயற்பணிகள்.

19. நிதிக் குழுவானது, பின்வரும் செயற்பணிகளைப் புரிதல் வேண்டும். அவையாவன:–

(அ) நிறுவனத்தின் கணக்குகளையும் வரவு–செலவு திட்ட மதிப்பீடுகளையும் கூர்ந்தாய்வு செய்து செயற்குழுவிற்குப் பரிந்துரைகள் செய்தல்;

(ஆ) பெரும்பணித் திட்டங்களுக்கான கொள்முதல்களின் காரணமாக எழும் புதிய செலவினங்களுக்கான செயற்குறிப்புகளைக் கூர்ந்தாய்வு செய்தல்;

(இ) மறு–பண ஒதுக்களிப்பு விவர உரைகளையும் தணிக்கைக் குறிப்புகளையும் கூர்ந்தாய்வு செய்து அவற்றின்மீது செயற்குழுவிற்குப் பரிந்துரைகள் செய்தல்;

(d) to review the finances of the Institute from time to time and have concurrent audit conducted whenever necessary; and

(e) to give advice and make recommendations to the Executive Council on any financial questions affecting the affairs of the Institute.

Other authorities.

20. The constitution, powers and functions of the other authorities, as may be declared by the Statutes to be authorities of the Institute, shall be such as may be provided by the Statutes.

## CHAPTER IV

## OFFICERS OF THE INSTITUTE

Officers of Institute.

21. The Institute shall consist of the following officers, namely:—

(*a*) the Director;

(*b*) the Registrar; and

(*c*) such other officers as may be declared by the Statutes to be the officers of the Institute.

Director.

22. (1) The Director of the Institute shall be appointed by the Visitor for a period of three years in the manner specified in sub-sections (*2*) and (*3*) on such terms and conditions of service as may be provided by the Statutes:

Provided that the first Director shall be appointed by the Central Government on such terms and conditions as it deems fit, for a period not exceeding six months from the appointed day.

(ஊ) அவ்வப்போது நிறுவனத்தின் நிதிநிலைகளை மறுஆய்வு செய்து, தேவைப்படும் போதெல்லாம் தொடர் தணிக்கை நடத்தப் பெறுதல்; மற்றும்

(உ) நிறுவனத்தின் அலுவற்பாடுகளைப் பாதிக்கிற நிதிநிலைப் பிரச்சினைகள் எவற்றின் மீதும் செயற்குழுவிற்குத் தேர்வுரை வழங்குதல் மற்றும் பரிந்துரைகள் செய்தல்.

20. நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகளென நிலையமைவிதிகளால் விளம்பப்படலாகும் பிற அதிகாரஅமைப்புகளின் அமைப்பும் அதிகாரங்களும் மற்றும் செயற்பணிகளும் நிலையமைவிதிகளால் வகை செய்யப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும். பிற அதிகார அமைப்புகள்.

**அத்தியாயம் IV**

**நிறுவனத்தின் அலுவலர்கள்**

21. நிறுவனம், பின்வரும் அலுவலர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும், அவர்களாவர்:– நிறுவனத்தின் அலுவலர்கள்.

(அ) இயக்குநர்;

(ஆ) பதிவாளர்; மற்றும்

(இ) நிறுவனத்தின் அலுவலர்களென நிலையமைவிதிகளால் விளம்பப்படலாகும் அத்தகைய பிற அலுவலர்கள்.

22. (1) நிறுவனத்தின் இயக்குநர் மேற்பார்வையீட்டாளரால் நிலையமைவிதிகளால் வகைசெய்யப்படலாகும் அத்தகைய பணி வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில் (2) மற்றும் (3) ஆகிய உட்பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட முறையில் மூன்று ஆண்டுக் காலஅளவு ஒன்றுக்குப் பணியமர்த்தம் செய்யப் பெறுதல் வேண்டும்: இயக்குநர்.

**வரம்புரையாக:** முதல் இயக்குநர், மைய அரசால், அது பொருத்தமெனக் கொள்ளும் அத்தகைய வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில், குறித்திட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலஅளவிற்கு, பணியமர்த்தம் செய்யப்பெறுதல் வேண்டும்.

(2) The Director shall be appointed by the Visitor from a panel of three persons with outstanding academic qualifications as recommended by a Search Committee constituted by the Central Government for that purpose.

(3) The Search Committee referred to in sub-section (2) shall consist of three members, one each to be nominated by the Executive Council, the Central Government and the Visitor.

(4) The Director shall be the principal academic and executive officer of the Institute and shall be responsible for the proper administration and academic performance of the Institute and for imparting of instruction and maintenance of discipline therein.

(5) The Director shall submit annual report and audited accounts of the Institute to the Executive Council and the Central Government and the Central Government shall thereupon cause the same to be laid before each House of Parliament.

(6) The Director shall exercise such other powers and perform such other duties as may be assigned to him by the Act, the Statutes and the Ordinances.

Registrar.

23. (1) The Registrar of the Institute shall be appointed in such manner and on such terms and conditions as may be provided by the Statutes and shall be the custodian of records, common seal, the funds of the Institute and such other property of the Institute as the Executive Council shall commit to his charge.

(2) மைய அரசு, மேற்பார்வையீட்டாளரால் இயக்குநரை அமர்த்தும் நோக்கத்திற்காக அதனால் அமைக்கப்பட்ட ஒரு தேர்வாய்வுக் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டவாறு மிகச்சிறந்த கல்விசார் தகுதிப்பாடுகளுடன் உள்ள மூன்று நபர்கள் அடங்கிய ஒரு தேர்ந்த பெயர்ப்பட்டியலில் இருந்து இயக்குநர் பணியமர்த்தம் செய்யப் பெறுதல் வேண்டும்.

(3). (2) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட தேர்வாய்வுக் குழுவனாது, செயற்குழு, மைய அரசு மற்றும் மேற்பார்வையீட்டாளர் ஆகிய ஒவ்வொருவராலும் நியமனம் செய்யபெற வேண்டிய ஒவ்வொருவர் வீதம் மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(4) இயக்குநர், நிறுவனத்தின் முதன்மைக் கல்விசார் மற்றும் செயற்பாட்டு அலுவலராக இருப்பார்; மற்றும் நிறுவனத்தின் முறையான நிருவாகத்திற்கும் கல்விசார் பணித்திறனுக்கும் மற்றும் அதில் கல்வி கற்பித்தலுக்கும் ஒழுங்குக்கட்டுப்பாட்டைப் பேணிவருவதற்கும் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்.

(5) இயக்குநர், நிறுவனத்தின் ஆண்டு அறிக்கையையும் தணிக்கை கணக்குகளையும் செயற்குழுவிற்கும் மைய அரசுக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்; மற்றும் மைய அரசு அதன்பேரில் அதனை நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படச் செய்தல் வேண்டும்.

(6) இயக்குநர், இந்தச் சட்டத்தாலும் நிலையமைவிதிகள் மற்றும் நெறியமைவிதிகளாலும் குறித்தளிக்கப்படலாகும் அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்துதலும் அத்தகைய பிற கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

23. (1) நிறுவனத்தின் பதிவாளர், நிலையமைவிதிகளினால் வகைச்செய்யப்படலாகும் அத்தகைய முறையிலும் அத்தகைய வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரிலும் பணியமர்த்தம் செய்யப்பெறுதல் வேண்டும்; மற்றும் நிறுவனத்தின் பதிவணங்களுக்கும், தனியுறு இலச்சினைக்கும் நிதியங்களுக்கும் மற்றும் செயற்குழு அவருடைய பொறுப்பில் ஒப்படைக்கவேண்டியதான நிறுவனத்தின் அத்தகைய பிற சொத்துக்கும் பொறுப்பாளர் ஆவார். பதிவாளர்.

(2) The Registrar shall act as the Member-Secretary of the Executive Council, the Academic Council and such committees as may be provided by the Statutes.

(3) The Registrar shall be responsible to the Director for the proper discharge of his functions.

(4) The Registrar shall exercise such other powers and perform such other duties as may be assigned to him by this Act, the Statutes or by the Director.

Other officers.

24. The manner of appointment, emoluments, powers and duties of the other officers of the Institute shall be such as may be provided by the Statutes.

## CHAPTER V

## FINANCE, ACCOUNTS AND AUDIT

Grants by Central Government.

25. The Central Government may, after due appropriation made by Parliament by law in this behalf, pay to the Institute in each financial year such sums of money and in such manner as it may think fit for being utilised for the purposes of this Act.

Fund of Institute.

26. (1) The Institute shall maintain a Fund to which shall be credited—

(*a*) all monies provided by the Central Government;

(b) all fees and other charges levied and collected by the Institute;

(c) all monies received by the Institute by way of grants, gifts, donations, benefactions, bequests or transfers; and

(2) பதிவாளர், செயற்குழு, கல்விக்குழு மற்றும் நிலையமைவிதிகளால் வகைச்செய்யப்படலாகும் அத்தகைய குழுக்களுக்கும் உறுப்பினர்–செயலாளராகச் செயல்படுவார்.

(3) பதிவாளர், அவருடைய செயற்பணிகளை முறையாக ஆற்றிவருவதற்கு இயக்குநருக்குப் பொறுப்புடையவர் ஆவார்.

(4) பதிவாளர், இந்தச் சட்டத்தாலோ, நிலையமைவிதிகளாலோ அல்லது இயக்குநராலோ அவருக்குக் குறித்தளிக்கப்படலாகும் அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்துதலும் அத்தகைய பிற கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

24. நிறுவனத்தின் பிற அலுவலர்களின் பணியமர்த்த முறை, பதவியூதியங்கள், அதிகாரங்கள், கடமைகள் ஆகியவை நிலையமைவிதிகளினால் வகை செய்யப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும். பிற அலுவலர்கள்.

## அத்தியாயம் V

## நிதி, கணக்குகள் மற்றும் தணிக்கை

25. மைய அரசானது, இதற்கென நாடாளுமன்றச் சட்டத்தால் செய்யப்படும் உரிய பண ஒதுக்களிப்புக்குப் பின்பு, ஒவ்வொரு நிதியாண்டிலும் நிறுவனத்திற்கு இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்கு அது பொருத்தமெனக் கருதும் அத்தகைய பணத்தொகையை அத்தகைய முறையில் வழங்கலாம். மைய அரசால் வழங்கப்படும் மானியங்கள்.

26. (1) நிறுவனமானது, நிதியம் ஒன்றை வைத்து வருதல் வேண்டும், அதில்– நிறுவனத்தின் நிதியம்.

(அ) மைய அரசால் வழங்கப்படும் அனைத்துப் பணமும்;

(ஆ) நிறுவனத்தால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும் கட்டணங்கள் மற்றும் பிற கட்டணத் தொகைகள் அனைத்தும்;

(இ) மானியங்கள், கொடைகள், நன்கொடைகள், அறக்கொடைகள், விருப்புறுதியாவண வழிக்கொடைகள் அல்லது சொத்துரிமை மாற்றங்கள் வழி நிறுவனத்தால் பெறப்படும் அனைத்துப் பணமும்; மற்றும்

(d) all monies received by the Institute in any other manner or from any other source.

(2) All monies credited to the Fund shall be deposited in such banks or invested in such manner as may be decided by the Executive Council.

(3) The Fund shall be applied towards meeting the expenses of the Institute including expenses incurred in the exercise of its powers and discharge of its duties under this Act.

Endowment or other funds.

27. Without prejudice to the provisions contained in section 26, the Institute may,—

(a) set up an endowment fund with an amount of one hundred crore rupees to be maintained in the Public Account and any other fund for a specified purpose; and

(b) transfer monies from its fund to the endowment fund or any other fund.

Accounts and audit.

28. (1) The Institute shall maintain proper accounts and other relevant records and prepare an annual statement of accounts, including the balance sheet, in such form as may be prescribed by the Central Government in consultation with the Comptroller and Auditor-General of India.

(2) The accounts of the Institute shall be audited by the Comptroller and Auditor-General of India and any expenditure incurred by him in connection with such audit shall be payable by the Institute to the Comptroller and Auditor-General of India.

(ஈ) பிற முறை எதிலும் அல்லது பிற ஆதாரம் எதிலும் இருந்து நிறுவனத்தால் பெறப்படும் அனைத்துப் பணமும்,

வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதியத்தில் வரவு வைக்கப்படும் அனைத்துப் பணமும், செயற்குழுவால் முடிபு செய்யப்படலாகும் அத்தகைய வங்கியில் வைப்பீடு செய்யப்படுதலோ அல்லது அத்தகைய முறையில் முதலீடு செய்யப்படுதலோ வேண்டும்.

(3) நிதியம், இந்தச் சட்டத்தின்படி நிறுவனம் தனது அதிகாரங்களைச் செலுத்துகையிலும், தனது கடமைகளைப் புரிகையிலும் செய்ய நேரிட்ட செலவுகள் உள்ளடங்கலான அதன் செலவுகளைச் செய்யும் பொருட்டுப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

நிலைக் கட்டளை அல்லது பிற நிதியங்கள்.

27. 26 ஆம் பிரிவில் அடங்கிய வகையங்களுக்குக் குந்தகமின்றி நிறுவனம்,–

(அ) பொதுக் கணக்கில் வைத்துவரப்பட வேண்டிய நூறுகோடி ரூபாய் தொகையுடன் ஒரு நிலைக்கட்டளை நிதியத்தையும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காகப் பிற நிதியம் எதனையும் நிறுவலாம்; மற்றும்

(ஆ) அதன் நிதியத்திலிருந்து பணத்தை, நிலைக்கட்டளை நிதியத்திற்கோ அல்லது பிற எந்தவொரு நிதியத்திற்குமோ மாற்றலாம்.

கணக்குகள் மற்றும் தணிக்கை.

28. (1) மைய அரசு, இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையருடன் கலந்தாய்ந்து அதனால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வடிவத்தில், நிறுவனம் ஐந்தொகைக்குறிப்பு உள்ளடங்கலான முறையான கணக்குகளும் பிற தொடர்புடைய பதிவணங்களும் வைத்து வருதலும், ஆண்டுக் கணக்குகள் விவர அறிக்கையொன்றைத் தயாரித்தலும் வேண்டும்.

(2) நிறுவனத்தின் கணக்குகள் இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையரால் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய தணிக்கை தொடர்பாக அவரால் செய்ய நேரிட்ட செலவினம் எதுவும் நிறுவனத்தால் இந்தியக் கணக்காய்வர்– தலைமைத் தணிக்கையருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) The Comptroller and Auditor-General of India and any person appointed by him in connection with the audit of the accounts of the Institute shall have the same rights, privileges and authority in connection with such audit as the Comptroller and Auditor-General of India has in connection with the audit of the Government accounts, and, in particular, shall have the right to demand the production of books, accounts, connected vouchers and other documents and papers and to inspect the offices of the Institute.

(4) The accounts of the Institute as certified by the Comptroller and Auditor-General of India or any other person appointed by him in this behalf together with the audit report thereon shall be forwarded annually to the Central Government and the Central Government shall cause the same to be laid before each House of Parliament.

Pension and provident fund.

29. (1) The Institute shall constitute for the benefits of its employees, including the Director, such pension, insurance and provident fund scheme as it may deem fit, in such manner and subject to such conditions as may be provided by the Statutes.

(2) Where any such provident fund has been so constituted, the Central Government may declare that the provisions of the Provident Funds Act, 1925 shall apply to such fund as if it were a Government Provident Fund. 19 /1925.

Appointment of staff of Institute.

30. All appointments of the staff of the Institute, except that of the Director, shall be made with the prior approval of the Central Government and in accordance with the procedure laid down in the Statutes,—

(3) இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையரும் மற்றும் நிறுவனத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்வது தொடர்பாக அவரால் அமர்த்தப் பெற்ற நபர் எவரும், அத்தகைய தணிக்கை தொடர்பாக அரசு கணக்குகளைத் தணிக்கை செய்வது தொடர்பாக இந்தியக் கணக்காய்வர் –தலைமைத் தணிக்கையர் கொண்டுள்ள அதே உரிமைகளையும், சிறப்புரிமைகளையும் அதிகார அடைவையும் கொண்டிருப்பார்; மற்றும் குறிப்பாகப் புத்தகங்கள், கணக்குகள், தொடர்புடைய செலவுச்சீட்டுகள் மற்றும் பிற ஆவணங்கள் மற்றும் கடிதங்கள் ஆவணங்கள் ஆகியவற்றை முன்னிடுமாறு கோருவதற்கும் நிறுவனத்தின் அலுவலகங்களை ஆய்வு செய்வதற்குமான உரிமைகளையும் கொண்டிருப்பார்.

(4) இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையரால் அல்லது இதற்கென அவரால் அதிகாரமளிக்கப்பெற்ற பிற நபர் எவராலும் சான்றளிக்கப்பட்டவாறான நிறுவனத்தின் கணக்குகள் அதன் மீதான தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து ஆண்டுதோறும் மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் மைய அரசு அதனை நாடாளுமன்றத்தின் அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படச் செய்தல் வேண்டும்.

ஓய்வூதியம் மற்றும் வருங்கால வைப்பு நிதியம்.

29. (1) நிறுவனமானது, இயக்குநர் உள்ளடங்கலான, அதன் பணியாளர்களின் நலப்பயனுக்காக நிலையமைவிதிகளினால் வகைசெய்யப்படலாகும் அத்தகைய முறையிலும் அத்தகைய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டும், அது தக்கதெனக் கருதலாகிற அத்தகைய ஓய்வூதியம், காப்பீடு மற்றும் வருங்கால வைப்புநிதியம் ஆகியவற்றிற்கான திட்டத்தை உருவாக்குதல் வேண்டும்.

(2) அத்தகைய வருங்கால வைப்புநிதியம் எதுவும் அவ்வாறாக உருவாக்கப்பட்டிருக்கிறவிடத்து, மைய அரசு, அத்தகைய நிதியம், ஓர் அரசு வருங்கால வைப்பு நிதியமாக
19/1925. இருப்பதைப் போன்று வருங்கால வைப்பு நிதியங்கள் சட்டம், 1925 இன் வகையங்கள் அத்தகைய நிதியத்திற்குப் பொருந்துதல் வேண்டும் என விளம்புகை செய்யலாம்.

நிறுவனப் பணியாளர் தொகுதிக்குப் பணியமர்த்தம்.

30. நிறுவனத்தின் இயக்குநருக்கானதாக அல்லாத பணியாளர் தொகுதியினருக்கான பணியமர்த்தங்கள் அனைத்தும், மைய அரசின் முன் ஒப்பேற்புடன் மற்றும் நிலையமைவிதிகளில் விதிக்கப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு இணங்க, –

(a) by the Executive Council, if the appointment is made on the academic staff in the post of Assistant Professor or above or if the appointment is made on the non-academic staff in any cadre, the maximum of the pay-scale for which is the same or higher than that of an Assistant Professor; and

(b) by the Director, in any other case.

Power to make Statutes.

31. Subject to the provisions of this Act, the Statutes may provide for all or any of the following matters, namely:—

(a) the formation of departments of teaching and other academic units;

(b) the institution of fellowships, scholarships, exhibitions, medals and prizes;

(c) the classification of posts, terms of office, method of appointment, powers and duties and other terms and conditions of service of the officers of the Institute including the Chairperson, the Director, the Registrar and such other officers as may be declared as officers of the Institute by the Statutes;

(d) the constitution, powers and duties of the authorities of the Institute referred in clause (c) of section 11;

(e) the delegation of powers vested in the authorities or officers of the Institute;

(அ) உதவிப் பேராசிரியர் அல்லது அதற்கு மேல் உள்ள பணியிடத்திற்கான கல்விப் பணியாளர் தொகுதியினருக்கு பணியமர்த்தம் செய்யப்படுமாயின் அல்லது உதவிப் பேராசிரியர் சம்பள ஏற்றமுறையின் மேல்வரை போன்று அதே அல்லது அதைவிட உயர் நிலையிலான சம்பள ஏற்ற முறையில் உள்ள பணியிடத்தில் கல்விசாராத பணியாளர் தொகுதியினருக்கு பணியமர்த்தம் செய்யப்படுமாயின், செயற்குழுவினாலும்;

(ஆ) பிற நேர்வுகள் எதிலும், இயக்குநராலும் செய்யப்படுதல் வேண்டும்.

நிலையமைமை– விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

31. இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, நிலையமைமவிதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன:–

(அ) கற்பித்தல் மற்றும் பிற கல்விசார் அலகுகளுக்கான துறைகளை அமைத்தல்;

(ஆ) புத்தாய்வு மாணவர் நிலைகள், படிப்பு உதவித் தொகைகள், புலமை உதவித்தொகைகள், பதக்கங்கள், பரிசுகள் ஆகியவற்றை நிறுவுதல்;

(இ) தலைமையர், இயக்குநர், பதிவாளர் மற்றும் நிலையமைவிதிகளினால் நிறுவனத்தின் அலுவலர்கள் என விளம்பப்படலாகும் அத்தகைய பிற அலுவலர்கள் உள்ளடங்கலான நிறுவன அலுவலர்களின் பணியிடங்கள், பதவிக்காலம், பணியமர்த்தத்தின் முறை, அதிகாரங்கள் மற்றும் கடமைகள் மற்றும் பிற வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள் ஆகியவற்றை வகைப்படுத்துதல்;

(ஈ) 11 ஆம் பிரிவு (இ) கூறில் சுட்டப்பட்டுள்ள நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகளின் அமைப்பாக்கம், அதிகாரங்கள் மற்றும் கடமைகள்;

(உ) நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகளில் அல்லது அலுவலர்களிடம் உற்றமைந்திருக்கும் அதிகார ஒப்படைவு;

(f) the code of conduct, disciplinary actions thereto for misconduct including removal from service of employees on account of misconduct and the procedure for appeal against the actions of an officer or authority of the Institute;

(g) the conferment of honorary degrees;

(h) the establishment and maintenance of halls, residences and hostels;

(i) the authentication of the orders and decisions of the Executive Council;

(j) any other matter which by this Act is to be, or may be, provided by the Statutes.

Statutes how to be made.

32. (1) The first Statutes of the Institute shall be framed by the Central Government with the approval of the Visitor, and a copy of the same shall be laid as soon as may be, after it is made, before each House of Parliament.

(2) Without prejudice to the provisions contained in sub-section (1), the Executive Council may, from time to time, make new or additional Statutes or may amend or repeal the Statutes in the manner hereafter in this section provided.

(3) A new Statute or addition to the Statutes or any amendment or repeal of a Statute shall require the previous approval of the Visitor who may assent thereto or withhold such assent or remit it to the Executive Council for consideration.

(ஊ) நன்னடத்தை விதிகள், நெறி தவறுகையின் காரணமாகப் பணியாளர்களைப் பணியிலிருந்து நீக்குதல் உள்ளடங்கலான நெறிதவறுகைக்கான ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் நிறுவனத்தின் அலுவலர் ஒருவரின் அல்லது அதிகாரஅமைப்பு ஒன்றின் நடவடிக்கைகளுக்கு எதிராக மேல்முறையீடு செய்வதற்கான நடைமுறை;

(எ) மதிப்புறு பட்டங்கள் வழங்குதல்;

(ஏ) கூடங்கள், உறைவிடங்கள் மற்றும் மாணவர் விடுதிகளை நிறுவுதல் மற்றும் பேணி வருதல்;

(ஐ) செயற்குழுவின் ஆணைகளுக்கும் முடிபுகளுக்கும் உறுதிச் சான்றிடுதல்; மற்றும்

(ஒ) இந்தச் சட்டத்தினால், நிலையமை விதிகளில் வகை செய்யப்படவேண்டிய அல்லது வகை செய்யப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

நிலையமை– விதிகள் எவ்வாறு செய்யப்படுதல் வேண்டும்.

32. (1) நிறுவனத்தின் முதல் நிலையமைவிதிகள் மைய அரசால், மேற்பார்வையீட்டாளரின் ஒப்பேற்புடன் வனையப்படுதல் வேண்டும் மற்றும் அதனின் படியொன்று, அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

(2) செயற்குழு, (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள வகையங்களுக்குக் குந்தகமின்றி, இதன்பின்பு இந்தப் பிரிவில் வகைசெய்யப்பட்டுள்ள முறையில், அவ்வப்போது, புதிய அல்லது கூடுதல் நிலையமைவிதிகளைச் செய்யலாம்; அல்லது நிலையமைவிதிகளைத் திருத்தம் செய்யலாம் அல்லது நீக்கறவு செய்யலாம்.

(3) ஒரு புதிய நிலையமைவிதி அல்லது நிலையமைவிதிகளுடன் சேர்த்தல் அல்லது நிலையமைவிதியொன்றைத் திருத்தம் செய்தல் அல்லது நீக்கறவு செய்தல் எதுவும் மேற்பார்வையீட்டாளரின் முன்ஒப்பேற்பை வேண்டுறுத்துவதாக இருத்தல் வேண்டும்; அவர் அதற்கு இசைவளிக்கலாம் அல்லது இசைவளிப்பதை நிறுத்தி வைக்கலாம் அல்லது ஓர்வு செய்வதற்காக செயற்குழுவிற்குத் திருப்பி அனுப்பலாம்.

(4) A new Statute or a Statute amending or repealing an existing Statute shall have no validity unless it has been assented to by the Visitor.

Power to make Ordinances.

33. Subject to the provisions of this Act and the Statutes, the Ordinances of the Institute may provide for all or any of the following matters, namely:—

(a) the admission of the students to the Institute;

(b) the reservation in admission to various courses or programmes of the Institute for the Scheduled Castes, the Scheduled Tribes and other categories of persons;

(c) the courses of study to be laid down for all degrees, diplomas and certificates awarded by the Institute;

(d) the conditions under which students shall be admitted to the degree, diploma and certificate courses and to the examinations of the Institute and the eligibility conditions for awarding the same;

(e) the conditions of award of fellowships, scholarships, exhibitions, medals and prizes;

(f) the conditions and manner of appointment and duties of examining bodies, examiners and moderators;

(g) the conduct of examinations;

(4) ஒரு புதிய நிலையமைவிதியோ அல்லது ஒரு நிலையமைவிதியொன்றைத் திருத்தம் செய்தலோ அல்லது நிலவுறும் நிலையமைவிதியை நீக்கறவு செய்தலோ மேற்பார்வையீட்டாளரால் இசைவளிக்கப்பட்டிருந்தாலன்றி அது செல்லுந்தன்மை கொண்டிருத்தல் ஆகாது.

நெறியமை–விதிகள் செய்வதற்கான அதிகாரம்.

33. இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கும் நிலையமைவிதிகளுக்கும் உட்பட்டு, நிறுவனத்தின் நெறியமைவிதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன:–

(அ) நிறுவனத்தில் மாணவர் சேர்க்கை;

(ஆ) பட்டியலில்கண்ட சாதியினருக்கும், பட்டியலில்கண்ட பழங்குடியினருக்கும் மற்றும் பிற வகை நபர்களுக்கும் நிறுவனத்தின் பல்வேறு பாடவகைப் பயிலாறுகள்அல்லது பாடத்திட்டங்களுக்கான சேர்க்கையில் இட ஒதுக்கீடு;

(இ) நிறுவனத்தால் வழங்கப்படும் அனைத்துப் பட்டங்களுக்கும் பட்டயங்களுக்கும் மற்றும் சான்றிதழ்களுக்கும் வகுக்கப்பட வேண்டிய பாடவகைப் பயிலாறுகள்;

(ஈ) எந்த வரைக்கட்டுகளின்படி மாணவர்கள், நிறுவனத்தின் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கும், தேர்வுகளுக்கும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதும் மற்றும் அவற்றை வழங்குவதற்கான தகுதி நிலைகளும்;

(உ) புத்தாய்வு மாணவர் நிலைகள், படிப்பு உதவித்தொகைகள், புலமை உதவித் தொகைகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகள் ஆகியவற்றை வழங்குவதற்கான வரைக்கட்டுகள்;

(ஊ) தேர்வுநடத்தும் குழுமங்கள், தேர்வாளர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்களின் அமர்த்துகைக்கான வரைக்கட்டுகளும், முறையும் மற்றும் அவர்களின் கடமைகளும்;

(எ) தேர்வுகள் நடத்துதல்;

(h) the maintenance of discipline among the students of the Institute;

(i) the fees to be charged for courses of study in the Institute and for admission to the examinations of degrees of the Institute;

(j) the conditions of residence of students of the Institute and the levying of the fees for residence in the halls and hostels and of other charges; and

(k) any other matter which by this Act or the Statute is to be, or may be, provided by the Ordinances.

Ordinances how to be made.

34. (1) Save as otherwise provided in this section, Ordinances shall be made by the Academic Council.

(2) All Ordinances made by the Academic Council shall have effect from such date as it may direct, but every Ordinance so made shall be submitted, as soon as may be, to the Executive Council and shall be considered by the Executive Council at its next succeeding meeting.

(3) The Executive Council shall have power by resolution to modify or cancel any such Ordinance and such Ordinance shall from the date of such resolution stand modified accordingly or cancelled, as the case may be.

(ஏ) நிறுவனத்தின் மாணவர்களிடையே ஒழுங்குக்கட்டுப்பாட்டைப் பேணிவருதல்;

(ஐ) நிறுவனத்தில் பாடவகைப் பயிலாறுகளுக்காகவும், நிறுவனத்தின் பட்டங்களுக்கான தேர்வுகளுக்கு அனுமதிப்பதற்காகவும் விதிக்கப்பட வேண்டிய கட்டணங்கள்;

(ஒ) நிறுவனத்தின் மாணவர்களின் உறைவிடத்திற்கான வரைக்கட்டுகள் மற்றும் கூடங்கள், மாணவர் விடுதிகள் மற்றும் உறைவிடத்திற்கான கட்டணங்களையும் மற்றும் பிற கட்டணத் தொகைகளையும் விதித்தல்; மற்றும்

(ஓ) இந்தச் சட்டத்தால் அல்லது நிலையமைவிதிகளால் வகை செய்யப்படவேண்டிய அல்லது நெறியமைவிதிகளால் வகை செய்யப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

நெறியமை–விதிகள் எவ்வாறு செய்யப்படுதல் வேண்டும்.

34. (1) இந்தப் பிரிவில் பிறவாறாக வகை செய்யப்பட்டிருப்பது நீங்கலாக, நெறியமைவிதிகள் கல்விக் குழுவால் செய்யப்படுதல் வேண்டும்.

(2) கல்விக் குழுவால் செய்யப்படும் நெறியமைவிதிகள் அனைத்தும் அது பணிக்கலாகும் அத்தகைய தேதியிலிருந்து செல்திறம் பெறும்; ஆனால் அவ்வாறு செய்யப்படும் நெறியமைவிதி ஒவ்வொன்றும் கூடிய விரைவில், செயற்குழுவின் முன்வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் செயற்குழுவால் அதன் அடுத்துத் தொடர்ந்து வரும் கூட்டத்தில் ஓர்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) செயற்குழு, தீர்மானத்தின் மூலமாக அத்தகைய நெறியமைவிதி எதனையும் மாற்றியமைப்பதற்கு அல்லது அறவு செய்வதற்கு அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய நெறியமைவிதி, அத்தகைய தீர்மானத்தின் தேதியிலிருந்து அதன்படியே மாற்றியமைக்கப்பட்டோ அல்லது நேர்வுக்கேற்ப, அறவு செய்யப்பட்டோ இருந்து வருதல் வேண்டும்.

Conduct of business by authorities of Institute.

35. The authorities of the Institute may have their own rules of procedure, consistent with the provisions of this Act, the Statutes and the Ordinances for the conduct of their own business and that of the committees, if any, appointed by them and not provided for by this Act, the Statutes or the Ordinances.

Tribunal of Arbitration.

36. (1) Any dispute arising out of a contract between the Institute and any of its employees shall, at the request of the employee concerned or at the instance of the Institute, be referred to a Tribunal of Arbitration consisting of one member appointed by the Institute, one member nominated by the employee, and an umpire appointed by the Visitor.

(2) The decision of the Tribunal shall be final and shall not be questioned in any court.

(3) No suit or proceeding shall lie in any court in respect of any matter, which is required by sub-section (1) to be referred to the Tribunal of Arbitration.

(4) The Tribunal of Arbitration shall have power to regulate its own procedure.

(5) Nothing contained in any law for the time being in force relating to arbitration shall apply to arbitrations under this section.

35. நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகள், தம் சொந்த அலுவலையும் அவற்றால் அமர்த்தப்பட்ட குழுக்கள் எவையேனுமிருப்பின், அவற்றின் அலுவலையும் நடத்துவதற்காக, இந்தச் சட்டத்தாலோ, நிலையமைவிதிகளாலோ அல்லது நெறியமைவிதிகளாலோ வகை செய்யப்படாதவிடத்து இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கும், நிலையமைவிதிகளுக்கும் மற்றும் நெறியமைவிதிகளுக்கும் இணங்கியவாறு, தம் சொந்த நடைமுறை விதிகளைக் கொண்டிருக்கலாம்.

நிறுவனத்தின் அதிகார–அமைப்புகளால் அலுவல் நடத்தப்படுதல்.

36. (1) நிறுவனத்துக்கும் அதன் பணியாளர்களில் எவருக்கும் இடையேயான ஒப்பந்தம் ஒன்றிலிருந்து எழும் பூசல் எதுவும், தொடர்புடைய பணியாளரின் கோரிக்கையின்படி அல்லது நிறுவனத்தின் வேண்டுகோளின்படி, நிறுவனத்தால் அமர்த்தப்பெற்ற ஓர் உறுப்பினர் பணியாளரால் நியமிக்கப்பெற்ற ஓர் உறுப்பினர், மற்றும் மேற்பார்வையீட்டாளரால் அமர்த்தப்பெற்ற ஒரு நடுவர் அடங்கிய பொதுவர் தீர்ப்பாயம் ஒன்றுக்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும்.

பொதுவர் தீர்ப்பாயம்.

(2) தீர்ப்பாயத்தின் முடிபே அறுதியானதாகும்; மற்றும் அது எந்தவொரு நீதிமன்றத்திலும் எதிர்த்து வாதிடப்படுதல் ஆகாது.

(3). (1) ஆம் உட்பிரிவினால் பொதுவர் தீர்ப்பாயத்திற்குக் குறித்தனுப்புவதற்கு வேண்டுறுத்தப்பட்ட பொருட்பாடு எதனையும் பொறுத்து, நீதிமன்றம் எதிலும் உரிமை வழக்கோ அல்லது நடவடிக்கையோ தொடர்வதற்கு உற்றது ஆகாது.

(4) பொதுவர் தீர்ப்பாயம் அதன் நடைமுறையினை சொந்தமாக ஒழுங்குப்படுத்திக் கொள்வதற்கு அதிகாரம் உடையதாக இருத்தல் வேண்டும்.

(5) பொதுவர்தீர்ப்புத் தொடர்பாக அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதிலும் அடங்கியுள்ள எதுவும் இந்தப் பிரிவின்படியான பொதுவர்தீர்ப்புகளுக்குப் பொருந்துதல் ஆகாது.

## CHAPTER VI

## MISCELLANEOUS

Acts and proceedings not to be invalidated by vacancies.

37. No act of the Institute or Executive Council or Academic Council or any other body set up under this Act or the Statutes, shall be invalid merely by reason of—

(a) any vacancy in, or defect in the constitution thereof; or

(b) any defect in the election, nomination or appointment, of a person acting as member thereof; or

(c) any irregularity in its procedure not affecting the merits of the case.

Grant of degrees, etc., by Institute.

38. Notwithstanding anything contained in the University Grants Commission Act, 1956) or any other law for the time being in force, 3 /1956. the Institute shall have power to grant degrees and other academic distinctions and titles under this Act:

Provided that the nomenclature of any degree to be granted by the Institute shall be notified by the University Grants Commission with the prior approval of the Central Government.

.

## அத்தியாயம் VI

## பல்வகை

37. நிறுவனத்தின் அல்லது செயற்குழுவின் அல்லது கல்விக் குழுவின் அல்லது இந்தச் சட்டத்தின்படியோ, நிலையமைவிதிகளின்படியோ நிறுவப்பட்ட பிற குழுமம் எதனின் செயல் எதுவும்– காலியிடங்கள் இருப்பதனால் செயல்களும் நடவடிக்கை–களும் செல்லுந்–தன்மையற்றவை–யாக ஆக்கப்படுதல் ஆகாது.

(அ) அதனின் அமைப்பாக்கத்திலுள்ள காலியிடம் அல்லது குறைபாடு எதனின்; அல்லது

(ஆ) அதன் ஓர் உறுப்பினராகச் செயலுறும் நபர் ஒருவரின் தேர்வில், நியமனத்தில் அல்லது அமர்த்தத்தில் உள்ள குறைபாடு எதனின்; அல்லது

(இ) நிகழ்வின் தகுதிகளைப் பாதிக்காத அதன் நடைமுறையிலுள்ள ஒழுங்கற்றத்தன்மை எதனின் காரணத்தால் மட்டுமே செல்லாநிலையதாகாது.

3/1956. 38. பல்கலைக்கழக மானியக் குழுச் சட்டம், 1956 இல் அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின்படி பட்டங்களும் பிற கல்விசார் சீர்மைகளும், சிறப்புப் பட்டங்களும் அளிப்பதற்கு நிறுவனம் அதிகாரம் உடையதாக இருத்தல் வேண்டும்: நிறுவனத்தால் பட்டங்கள் முதலியவை அளிக்கப்படுதல்.

**வரம்புரையாக:** நிறுவனத்தால் வழங்கப்படும் பட்டம் எதற்கும் பெயரிட்டு வழங்கும் முறை, மைய அரசின் முன் ஒப்பேற்புடன் பல்கலைக்கழக மானியக் குழுவினால் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

Sponsored schemes.

39. Notwithstanding anything contained in this Act, whenever the Institute receives funds from any Government, the University Grants Commission or any other agency including, industry sponsoring a research scheme, a consultancy assignment, a teaching programme or a chaired professorship or a scholarship, to be executed or endowed at the Institute,—

(a) the amount received shall be kept by the Institute separately from the fund of the Institute and utilised only for the purpose of the scheme:

Provided that any money remaining unutilised under this clause shall be transferred to the endowment fund set up under section 27; and

(b) the staff required to execute the same shall be recruited in accordance with the terms and conditions stipulated by the sponsoring organisation with prior approval of the Central Government:

Provided that the principles laid down in the General Financial Rules, 2005 shall be followed for approval of sponsored schemes funded by the Central Government.

Meetings of Academic Council and Finance Committee.

40. The Academic Council and the Finance Committee shall meet at such times and follow such procedure, in its meetings (including quorum at such meetings) as may be provided by the Statutes.

Power of Central Government to give directions to Institute.

41. (1) The Central Government may give such directions, as it may deem necessary, to the Institute for the effective administration of this Act and the Institute shall comply with such directions.

ஊக்க ஆதரவுச் செயல்முறைத் திட்டங்கள்.

39. இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அரசு எதனிடமிருந்தோ, பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்தோ அல்லது நிறுவனத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய அல்லது நிலைக்கட்டளை அளிக்கப்பட வேண்டிய, ஆராய்ச்சி செயல்முறைத் திட்டம், ஒரு கலந்தாய்வு குறித்தளிப்பு, ஒரு கற்பித்தல் செயல்முறை வகுப்பு அல்லது ஒரு தலைமைப் பேராசிரியர் நிலை அல்லது படிப்பு உதவித் தொகை ஒன்றிற்கு ஊக்க ஆதரவு தருகின்ற விசைத்தொழில் உள்ளடங்கலான பிற முகமை எதனிடமிருந்தோ நிறுவனம் நிதிகளைப் பெறும்போதெல்லாம்,–

(அ) பெறப்படும் தொகையானது நிறுவனத்தால், நிறுவனத்தின் நிதியத்திலிருந்து தனியாக வைக்கப்பட்டு செயல்முறைத்திட்டத்தின் நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும்:

**வரம்புரையாக:** இந்தக் கூறின்படி பயன்படுத்தப்படாமல் எஞ்சியிருக்கும் பணம் எதுவும் 27 ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட நிலைக்கட்டளை நிதியத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும்.

(ஆ) அதனை நிறைவேற்றத் தேவைப்படும் பணியாளர் தொகுதிக்கு ஊக்கஆதரவு தரும் அமைவனத்தால் சுட்டிக்காட்டப்படும் வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின்படி, மைய அரசின் முன்ஒப்பேற்புடன் ஆளெடுக்கப்படுதல் வேண்டும்:

**வரம்புரையாக:** மைய அரசால் நிதியுதவி அளிக்கப்படும் ஊக்கஆதரவுச் செயல்முறைத் திட்டங்களை ஒப்பேற்பளிப்பதற்குப் பொது நிதி விதிகள், 2005 இல் வகுக்கப்பட்டுள்ள நெறிகள் பின்பற்றப்படுதல் வேண்டும்.

கல்விக் குழு மற்றும் நிதிக் குழு கூட்டங்கள்.

40. கல்விக் குழுவும், நிதிக் குழுவும் நிலையமைவிதிகளால் வகைசெய்யப்படலாகும் அத்தகைய காலங்களில் கூடுவதும் அதன் கூட்டங்களில் (அத்தகைய கூட்டங்களில் குறைவெண் உள்ளடங்கலாக) அத்தகைய நடைமுறையைப் பின்பற்றுதலும் வேண்டும்.

நிறுவனத்திற்கு பணிப்புரைகள் வழங்குவதற்கு மைய அரசுக்குள்ள அதிகாரம்.

41. (1) இந்தச் சட்டத்தைத் திறம்படச் செயல்படுத்துவதற்கு, மைய அரசு அது தேவையெனக் கொள்ளலாகும் அத்தகைய பணிப்புரைகளை நிறுவனத்திற்கு வழங்குதல் வேண்டும்; மற்றும் நிறுவனம் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

(2) In case of dispute between the Institute and the Central Government, in connection with the exercise of its powers and discharge of its functions by the Institute under this Act, the decision of the Central Government on that dispute, shall be final.

Protection of action taken in good faith.

42. No suit or other legal proceedings shall lie against any officer or employee of the Institute for anything which is in good faith done or intended to be done in pursuance of any of the provisions of this Act, the Statutes or the Ordinances.

Power to make rules.

43. (1) The Central Government may, by notification, make rules to carry out the provisions of this Act.

(2) In particular and without prejudice to the generality of the foregoing power, such rules may provide for all or any of the following matters, namely:—

(a) the form and manner in which the books of account of the Institute shall be maintained under sub-section (1) of section 28;

(b) any other matter which is required to be, or may be, prescribed.

Statutes, Ordinances and notifications to be published in Official Gazette and to be laid before Parliament.

44. (1) Every rule made by the Central Government and every Statute and every Ordinance made or notification issued under this Act shall be published in the Official Gazette.

(2) இந்தச் சட்டத்தின்படி, நிறுவனம் அதன் அதிகாரங்களை செலுத்துதல் மற்றும் அதன் செயற்பணிகளைப் புரிதல் தொடர்பாக நிறுவனத்திற்கும் மைய அரசுக்கும் இடையே பூசல் இருக்கும் நேர்வில், அந்தப் பூசலின் மீது மைய அரசின் முடிபே அறுதியானதாகும்.

42. இந்தச் சட்டம், நிலையமைவிதிகள் அல்லது நெறியமைவிதிகளின் வகையங்களில் எதற்கும் இணங்க நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யப்படக் கருதப்பட்ட எதற்காகவும், நிறுவனத்தின் எந்தவொரு அலுவலருக்கும் அல்லது பணியாளருக்கும் எதிராக உரிமை வழக்கோ அல்லது பிற சட்ட நடவடிக்கையோ தொடருவதற்கு உற்றது ஆகாது.

நல்லெண்ணத்–தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்–குப் பாதுகாப்பு.

43. (1) மைய அரசு, இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றும்பொருட்டு அறிவிக்கை வாயிலாக, விதிகளைச் செய்யலாம்.

விதிகள் செய்வதற்கான அதிகாரம்.

(2) குறிப்பாகவும், மேலேகண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும் அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன:–

(அ) 28 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்கள் எந்த வடிவத்திலும் முறையிலும் பேணிவரப்படுதல் வேண்டும் என்பது;

(ஆ) வகுத்துரைக்கப்பட வேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

44. (1) இந்தச் சட்டத்தின்படி, மைய அரசினால் செய்யப்படும் ஒவ்வொரு விதியும் மற்றும் செய்யப்படும் நிலையமைவிதி ஒவ்வொன்றும் மற்றும் நெறியமைவிதி ஒவ்வொன்றும் அல்லது வெளியிடப்படும் அறிவிக்கை ஆகியவை அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும்.

நிலையமை–விதிகளும், நெறியமை–விதிகளும் மற்றும் அறிவிக்கை–களும் அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படுதல் மற்றும் நாடாளு–மன்றத்தின் முன்பு வைக்கப்படுதல்.

(2) Every rule made by the Central Government, every Statute and every Ordinance made or notification issued under this Act shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament, while it is in session, for a total period of thirty days which may be comprised in one session or in two or more successive sessions, and if, before the expiry of the session immediately following the session or the successive sessions aforesaid, both Houses agree in making any modification in the Statute, Ordinance or notification or both Houses agree that the Statute, Ordinance or notification should not be made or issued, the Statute, Ordinance or notification shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be; so, however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that Statute, Ordinance or notification.

(3) The power to make the Statutes, Ordinances or notifications shall include the power to give retrospective effect from a date not earlier than the date of commencement of this Act, to the Statutes, Ordinances, notifications or any of them but no retrospective effect shall be given to any Statute, Ordinance or notification so as to prejudicially affect the interests of any person to whom such Statute, Ordinance or notification may be applicable.

(2) இந்தச் சட்டத்தின்படி மைய அரசால் செய்யப்படும் விதி ஒவ்வொன்றும், செய்யப்படும் நிலையமைவிதி ஒவ்வொன்றும் மற்றும் நெறியமைவிதி ஒவ்வொன்றும் அல்லது அறிவிக்கையும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும் அது ஒரு கூட்டத்தொடராகவோ, இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத்தொடர்களாகவோ முப்பது நாட்களைக் கொண்ட மொத்தக் காலஅளவுக்கு அமர்வில் இருக்கையில் அதன்முன் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு அந்த நிலையமைவிதியில் அல்லது நெறியமைவிதியில் அல்லது அறிவிக்கையில் மாற்றமைவு எதுவும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின் அல்லது அந்த நிலையமைவிதி அல்லது நெறியமைவிதி அல்லது அறிவிக்கை ஆகியவை செய்யப்படுதல் அல்லது வெளியிடப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன்பின்பு அந்த நிலையமைவிதி அல்லது நெறியமைவிதி அல்லது அறிவிக்கை அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையதாக இருத்தல் வேண்டும்; அல்லது நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும், எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த நிலையமைவிதியின்படி அல்லது நெறியமை விதியின்படி அல்லது அறிவிக்கையின்படி முன்னதாக செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

(3) நிலையமைவிதிகள், நெறியமைவிதிகள் அல்லது அறிவிக்கைகள் செய்வதற்கான அதிகாரம், அந்த நிலையமைவிதிகளுக்கு, நெறியமைவிதிகளுக்கு, அறிவிக்கைகளுக்கு அல்லது அவற்றில் எதற்கும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்னராக அல்லாத ஒரு தேதியிலிருந்து முன்மேவு செல்திறம் கொடுப்பதற்கான அதிகாரத்தை உள்ளடக்கும். ஆனால் அத்தகைய நிலையமைவிதி, நெறியமைவிதி அல்லது அறிவிக்கை எந்த நபருக்குப் பொருந்தலாகுமோ அந்த நபர் எவரின் நலன்களைக் குந்தகமாகப் பாதிக்கும் வகையில் நிலையமைவிதி, நெறியமைவிதி அல்லது அறிவிக்கை எதற்கும் முன்மேவு செல்திறம் கொடுக்கப்படுதல் ஆகாது.

Power to remove difficulties.

45. (1) If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Central Government may, by order published in the Official Gazette, make such provisions or give such directions not inconsistent with the provisions of this Act, as appears it to be necessary or expedient for removing the difficulty:

Provided that no order shall be made under this section after the expiry of two years from the date of commencement of this Act.

(2) Every order made under this section shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament.

Transitional provisions.

46. Notwithstanding anything contained in this Act,—

(a) the Advisory Board and the Executive Council of the existing Institute functioning as such immediately before the commencement of this Act shall continue to so function until an Executive Council is constituted for the Institute under this Act, but on the constitution of a new Executive Council under this Act, the members of the Advisory Board and Executive Council holding office before such constitution shall cease to hold office; and

(b) until the first Statutes and the Ordinances are made under this Act, the Statutes and the Ordinances of the existing Institute, or notification as in force, immediately before the commencement of this Act, shall continue to apply to the Institute in so far as they are not inconsistent with the provisions of this Act.

45. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்குச் செல்திறம் கொடுப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் ஆணையின் வழி, அந்த இடர்ப்பாட்டினை அகற்றுவதற்குத் தேவையென அல்லது உகந்ததென அதற்குத் தோன்றுகிற இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகையங்களைச் செய்யலாம் அல்லது அத்தகைய பணிப்புரைகளைக் கொடுக்கலாம்:

இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்.

**வரம்புரையாக:** இந்தப் பிரிவின்படியான, ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து ஈராண்டு கழிவுற்ற பின்பு செய்யப்படுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின்படி செய்யப்படும் ஆணை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில் நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

46. இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்,–

மாறும் இடைக்–காலத்திற்கான வகையங்கள்.

(அ) இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்கு உடன்முன்பு அவ்வாறாகச் செயல்படும் நிலவுறும் நிறுவனத்தின் ஆலோசனைக் குழுமமும், செயற்குழுவும் இந்தச் சட்டத்தின்படி நிறுவனத்துக்காக ஒரு செயற்குழு அமைக்கப்படுகிற வரையில் அவ்வாறு தொடர்ந்து செயல்படும், ஆனால் இந்தச் சட்டத்தின்படி ஒரு புதிய செயற்குழு அமைக்கப்படுவதன் பேரில், அத்தகைய அமைப்பாக்கத்திற்கு முன்பு பதவி வகித்து வந்த ஆலோசனை குழுமத்தின் மற்றும் செயற்குழுவின் உறுப்பினர்கள் பதவி வகிப்பது அற்றுப்போதல் வேண்டும்; மற்றும்

(ஆ) இந்தச் சட்டத்தின்படி முதல் நிலையமைவிதிகளும் நெறியமைவிதிகளும் செய்யப்படும் வரையில், இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்கு உடன்முன்பு செல்லாற்றலில் இருந்தவாறான நிலவுறும் நிறுவனத்தின், நிலையமைவிதிகளும், நெறியமைவிதிகளும் அல்லது அறிவிக்கை, அவை இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு முரணாக இல்லாத அளவுக்கு நிறுவனத்துக்குத் தொடர்ந்து பொருந்துதல் வேண்டும்.